தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.11.2013**

**நீலகிரியில் தொடரும் மழை: 321 மி.மீ. பதிவு**

நீலகிரி மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவும் பரவலாக நல்ல மழை பெய்தது. கூடலூர் மற்றும் தேவாலா பகுதிகளைத் தவிர மாவட்டத்தின் ஏனைய இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 321.2 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக கெத்தையில் 72 மி.மீ. மழை பதிவானது. பிற பகுதிகளில் பதிவான மழை அளவு (மி.மீ.யில்): குந்தா-55, குன்னூர்-47, பர்லியார்-26, கொடநாடு-19, அப்பர்பவானி-18, அவலாஞ்சி-17, கிண்ணக்கொரை, எமரால்டு-15, கோத்தகிரி-13, கேத்தி-12, உதகை, கிளன்மார்கன் 6 மி.மீ.

**சின்னேரிபாளையத்தில் கோமாரி நோய் தாக்கி 4 மாடுகள் பலி**

அவிநாசி அருகே, சின்னேரிபாளையத்தில் கோமாரி நோய் தாக்கி 4 மாடுகள் உயிரிழந்தன.

திருப்பூர், ஈரோடு, கோவை, நீலகிரி ஆகிய பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கி, உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

சின்னேரிபாளையத்தைச் சேர்ந்த தனலட்சுமி, மாடுகள் வளர்த்து வந்தார்.

கடந்த ஒரு வாரமாக அவரது மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டு, கால்நடை மருத்துவர்கள் மூலமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது

இருப்பினும், சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை, ஒரு சினை மாடு உயிரிழந்தது. அதைத்தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை காலை ஒரு கன்றுகுட்டி, 2 சினை மாடுகள் உயிரிழந்தன.

**திப்பனூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்**

பெ.நா.பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டங்களில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குவதைத் தடுக்க போதிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நஞ்சுண்டாபுரம் ஊராட்சியில் நடந்த கூட்டத்திற்கு அதன் தலைவர் வி.கே.வி. சுந்தரராஜனும், சின்னத்தடாகம் ஊராட்சியில் நடந்த கூட்டத்திற்கு அதன் தலைவர் டி.என்.வேலுச்சாமியும் தலைமை வகித்தனர். இதில், பங்கேற்ற கால்நடை மருத்துவர் புஷ்பா, இரு ஊராட்சிகளிலும் 906 மாடுகளும், 1367 ஆடுகளும் உள்ளன. இதுவரை இப் பகுதியில் கோமாரி நோய்த் தாக்குதல் இல்லை. இருப்பினும், போதிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தி கால்நடைகளைப் பாதுகாக்கும் முறை குறித்து விளக்கினார். துணைத் தலைவர்கள் திருநாவுக்கரசு, வேல்முருகன், விவசாயிகள் சங்கத் தலைவர் என்.ஆர்.ராமசாமி, ஊராட்சி உறுப்பினர்கள் நாகராஜ், குமாரசாமி,நிர்மலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பன்னிமடை ஊராட்சியில் அதன் தலைவர் சரவணகுமார் தலைமையில் நடந்த கூட்டத்தில் திப்பனூர் பகுதியில் 1110 மாடுகளும், 2500-க்கும் மேற்பட்ட ஆடுகளும் உள்ளதால் இங்கு துணை கால்நடை மருத்துவமனை திறக்க வேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கால்நடை மருத்துவர் சாம் ரிச்சர்ட்சன், துணைத் தலைவர் தாமோதரன், கவுன்சிலர் மகேஸ்வரன், செப்ந்திரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குருடம்பாளையம் ஊராட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு டி.ரவி தலைமை வகித்தார். கால்நடை மருத்துவர் செந்தில்குமார் இந்த ஊராட்சியில் உள்ள 476 மாடுகளுக்கும், 1072 ஆடுகளுக்கும் மருத்துவப் பரிசோதனை

மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை எதுவும் நோயால் தாக்கப்படவில்லை என்றார்.

சோமையம்பாளையம் ஊராட்சியில் நடந்த கூட்டத்திற்கு அதன் தலைவர் ஆர்.ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் நோய் பரவாமல் இருக்க போதிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கால்நடைகளை வளர்ப்போர் ஊராட்சிக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். துணைத் தலைவர் ஆனந்தகுமார், ஊராட்சி மன்ற உறுப்பினர் மயில்சாமி மற்றும் கால்நடைகள் வளர்ப்போர் கலந்து கொண்டனர்.

**மீன்பாடு அதிகரித்ததால் மீனவர்கள் மகிழ்ச்சி**

12 நாள்களுக்கு பின் மீன்பிடிக்க சென்றதில் மீன்பாடு அதிகம் கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியுடன் செவ்வாய்க்கிழமை கரை திரும்பினர்.

இலங்கை சிறையிலிருக்கும் தமிழக மீனவர்களையும்,படகுகளையும், விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் தலையிட வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் நவம்பர் 6 ஆம் தேதி முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

பின்னர் சூழ்நிலை கருதி வேலை நிறுத்தத்தை ஞாயிறுக்கிழமை வாபஸ் பெற்றனர். திங்கள்கிழமை 691 விசைப்படகுகளில் மீனவர்கள் மீனபிடிக்க கடலுக்கு சென்றனர். 12 நாள்களுக்கு பின் கடலுக்குச் சென்றதால் மீன்கள், இறால், கணவாய், நண்டு, உள்பட சிறிய மீன்கள் அதிகமாக கிடைத்துள்ளது.

மீனவர்கள் ஒரு படகில் கடலுக்குச் சென்று வர 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். அதிகமான மீன்கள் பிடித்து வந்தால் மட்டுமே நஷ்டம் இல்லாமல் தப்பிக்க முடியும்.

செவ்வாய்க்கிழமை கரை திரும்பிய மீனவர்கள் ஒவ்வொரு படகிலும் இறால் மீனகள் சராசரி 90 கிலோ வரை கிடைத்ததால் லாபம் அதிகரிக்கும் என்றனர்.

வேளாண் பொறியியல் துறை மூலம் 50சதவீத மானியத்தில் விவசாய கருவிகள்

வேளாண் பொறியியல் துறை மூலம், 50 சதவீத மானியத்தில் விவசாய கருவிகள் வழங்கப்பட உள்ளதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2013-14ஆம் நிதி ஆண்டில் விவசாயிகளுக்கு 30 முதல் 50 சதவீத மானியத்தில் பவர் டில்லர், களை எடுக்கும் கருவி, ரோட்டாவேட்டர், டிராக்டரால் இயக்கப்படும் உபகரணங்கள், பவர் டில்லர் மூலம் இயக்கப்படும் உபகரணங்கள், மோட்டார் பிளேட், உருளை விதைப்பான், தென்னை மரம் ஏறுவதற்கான கருவி, மானாவாரி களையெடுக்கும் கருவி, கைத்தெளிப்பான், மோட்டாரை இயக்கும் ரிமோட் கருவி, மரம் அறுக்கும் கருவி, புல்வெட்டும் கருவி, மரம் கவாத்து கருவி, நடமாடும் பாசன கருவி, மழைத்தூவான், பல தானியங்களை கதிரடிக்கும் இயந்திரம் முதலியவற்றை விவசாயிகள் கொள்முதல் செய்ய மானியம் வழங்க தமிழக அரசு ரூ.1.25 கோடி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் கருவியினை கொள்முதல் செய்ய விரும்பும் விவசாயிகள், விலைப்புள்ளி, நிலத்தின் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், புகைப்படம் முதலிய ஆவணங்களுடன் சிவகங்கை வருவாய் கோட்டத்தைச் சேர்ந்தவர்கள் சிவகங்கை தொண்டி சாலையில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும் (தொலைபேசி எண் 04575 - 240288), தேவகோட்டை வருவாய் கோட்டத்தைச் சேர்ந்தவர்கள் காரைக்குடி, சுப்ரமணியபுரம் 9வது தெருவில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை (தொலைபேசி எண் 9942283830) தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பம் கொடுக்கும் போது விவசாயிகள் தங்களது பங்களிப்பு தொகைக்கான வங்கி வரைவோலையைக் கொடுக்கும் வகையில் தயாராக இருக்க வேண்டும். இது தொடர்பாக மேலும் விவரம் அறிய விரும்புவோர் சிவகங்கை மாவட்ட வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அலுவலகத்தை (தொலைபேசி எண் 04575 - 240213) தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை

திண்டுக்கல் மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக கொடைக்கானலில் 30, குறைந்தபட்சமாக நத்தம் பகுதியில் 3 மி. மீட்டர் என மழை அளவு பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் மி.மீட்டரில் வருமாறு: திண்டுக்கல்-10.40, கொடைக்கானல்-30.60, நத்தம்-3, நிலக்கோட்டை-4.20, பழனி-4, வேடசந்தூர்-4.07, சத்திரபட்டி-9.40, வேடசந்தூர் புகையிலை மையம்-4, கொடைக்கானல் போட் கிளப்-21, காமாட்சிபுரம்-3.60 என மாவட்டம் முழுவதும் 94 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**கோமாரி நோய்: கால்நடைத்துறை அதிகாரிகளுடன் ஆட்சியர் ஆலோசனை**

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்த்தாக்குதலைத் தடுப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில், கோமாரி நோய்த்தாக்குதல் ஏற்பட்ட பகுதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றி கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சியர் விரிவாக எடுத்துரைத்தார். நோய் தாக்கிய கால்நடைகளை உடனடியாக கண்டறிந்து தனிமைப்படுத்தவும், உடனடியாக மருத்துவம் செய்யவும் அவர் அறிவுறுத்தினார். மேலும், சலவை சோடா கரைசல் கொண்டு தொழுவம் மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்யவும், கால்நடை தொழுவங்களில் பிளீச்சிங் பவுடர் கொண்டு சுத்தம் செய்யவும் அறிவுரை கூறினார்.

நவ.20 ஆம் தேதி ஊராட்சிகளில் நடைபெறும் சிறப்பு கிராம சபைக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர்.அ.பாபுஜி மற்றும் உதவி இயக்குநர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நெல் விலையை உயர்த்த வலியுறுத்தி நவ. 21-ல் நடைபயணம்

நெல்விலையை உயர்த்த வலியுறுத்தி நவ.21-ம் தேதி பெங்களூரு ரயில்நிலையத்திலிருந்து விதானசௌதாவை நெல்விவசாயிகள் நடைபயணம் மேற்கொள்கின்றனர்.

இது குறித்து கர்நாடக மாநில விவசாய சங்கம் துணைத்தலைவர் ஓம்காரப்பா செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: நவ. 21-ம் தேதி மாநிலத்தில் உள்ள நெல் விவசாயிகள் குவின்டால் நெல்லுக்கு ரூ. 2500 ஆதரவு விலையை உயர்த்தவும், 18 மணிநேரம் 3 பேஸ் மின்சாரத்தை வழங்கவும், தொழிற்சாலைகளுக்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க வலியுறுத்தியும் பெங்களூரு ரயில்நிலையத்திலிருந்து விதானசௌதாவரை நடைபயணம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

### விசூர் செம்பேரி பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூ.20 லட்சம் பாழ்: பெயரளவில் பணிகள் நடந்ததாக பாசன விவசாயிகள் வேதனை

விசூர் செம்பேரி பராமரிப்புப் பணி பெயரளவுக்கு நடைபெற்றதால், ஒரு போகம் கூட விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

பண்ருட்டி வட்டம் விசூர் கிராமத்தில் 150 ஏக்கர் பரப்பளவு கொண்ட செம்பேரி உள்ளது. காட்டாறுகள் மூலம் தண்ணீர் வசதி பெறும் இந்த ஏரியால், நன்னிக்குப்பம், ரெட்டிப்பாளையம், மணலூர், விசூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இக்கிராமங்களின் விவசாயிகள் ஏரிப் பாசனத்தை நம்பியே உள்ளனர். ஏரியில் தண்ணீர் தேங்கி நின்றால் இருபோகம் விளைச்சல் கிடைக்கும் என கூறுகின்றனர் விவசாயிகள்.

ஆனால் தற்போது ஒரு போகம் விளைச்சலுக்குக் கூட தண்ணீர் பற்றவில்லை என குற்றம் சாட்டுகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் நன்னிக்குப்பம் கேசவன், ரெட்டிப்பாளையம் கிருஷ்ணன் கூறியது:

ஏரிப் பாசனத்தை நம்பியே விவசாயம் செய்து வருகின்றோம். ஏரியில் நீர்பிடிப்பு பகுதி அதிகம் இருந்ததால் 40 வருடங்களுக்கு முன்னர் இரு போகம் விளைந்தது. தற்போது ஏரி ஆக்கிரமிப்பில் உள்ளதால் ஒரு போகம் மட்டும் தான் விவசாயம் செய்ய முடியும். கடந்த ஆண்டு ஏரி சீரமைப்புப் பணி நடைபெற்றது. ஏரி ஆழப்படுத்தப்படவில்லை, மதகு, கலங்கல் தாழ்த்தி கட்டப்பட்டுள்ளது. தரமற்றப் பணியால் மதகு சேதம் அடைந்துவிட்டது. இதனால் ஏரியில் தண்ணீர் தேங்க வாய்ப்பில்லை. இந்த முறை ஒரு போகம் பயிர் செய்வதே கேள்விக்குறியாகிவிட்டது என வேதனையுடன் கூறினர்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை (நீர்வளம்) உதவி பொறியாளர் கீதா கூறியது:

விசூர் செம்பேரி 58.04 ஹெக்டர் பரப்பளவு கொண்டது. 2011-2012-ஆம் ஆண்டு நிர்வள நிலவள திட்டத்தின் கீழ் ரூ.19.72 லட்சம் செலவில் கரை உயர்த்தல், மதகு மற்றும் கலங்கு அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறினார். மதகு சேதம் அடைந்துள்ளது குறித்து கேட்டதற்கு தனக்கு முன்னர் இருந்த அதிகாரி தான் அப்போது பணியில் இருந்தார் என கூறினார்.

எனவே, சேதம் அடைந்த விசூர் செம்பேரி மதகை சீர்செய்யவும், தரமற்றப் பணிகளை செய்த ஒப்பந்ததாரர் மற்றும் கண்காணிக்க தவறிய அரசுத் துறை அதிகாரிகள் மீது மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி விவசாயிகள் கோரிக்கையாகும்.

**கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும் உலக வங்கி நிதியுதவி நீர்நிலைகளை மேம்படுத்த**

2011-ல் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு ஏரிகள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்றன.

ஏரிகள் புனரமைப்புப் பணிகள் முழுமையாக செயல்படுத்தப்பட்டிருந்தால் மழைநீர் சேமிப்பு, கால்நடை, விவசாயப் பயன்பாட்டுக்கு என பொதுமக்கள் தண்ணீர் தேக்கியிருக்க முடியும்.

ஒரு சில இடங்களில் பணிகள் சரிவர நடைபெறவில்லை. இதில் ஏற்பட்ட குறைகளை சரிசெய்ய வேண்டும். குறைகளைக் களைய நீர்நிலை புனரமைப்புப்

பணிகள் நடைபெறும் இடங்களில் விவசாயிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும் என கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்புத் தலைவர் ஏ.பி.ரவீந்திரன் தெரிவித்தார்.

**மூலிகை மருத்துவ முறையில் கட்டுப்படுத்த யோசனை**

கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு மரபு சார்ந்த மூலிகை மருத்துவ முறை மூலம் கட்டுப்படுத்தலாம் என, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜேந்திரன் யோசனை தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை பகுதிகளில் கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை மாவட்டத்தில் 73 கால்நடைகள் இந்த நோயால் உயிரிழந்ததாகவும், 400-க்கும் மேற்பட்ட கால்நடைகள் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கால்நடைப் பராமரிப்புத் துறை தெரிவித்தது. இதைக் கட்டுப்படுத்த ஊத்தங்கரை பகுதியில் 20 மருத்துவக் குழு அமைக்கப்பட்டு தடுப்பூசி போடப்படுகிறது.

இந்த நிலையில், கோமாரி நோயைக் கட்டுப்படுத்த மரபு சார்ந்த மூலிகை மருத்துவ முறைகளைப் பின்பற்றலாம் என, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வெந்தயம், சீரகம் தலா 100 கிராம் எடுத்து, 100 மில்லி நீரில் ஒரு மணி நேரம் ஊற வைத்து நீரை வடிகட்டி நன்றாக அரைக்க வேண்டும். இவற்றுடன் பூண்டு 4 பல், மஞ்சள் தூள் 10 கிராம், நாட்டுச் சர்க்கரை 100 கிராம் ஆகியவற்றைச் சேர்த்து குழம்பாக அரைக்க வேண்டும். இவற்றுடன் துருவியத் தேங்காயைச் சேர்த்து உருண்டையாக்க வேண்டும்.

இந்த மூலிகை மருந்து உருண்டையை கால்நடைகள் சாப்பிடும் வகையில், அதன் வாயை அகலமாக விரித்து, கடவாய் பல்லில் தடவ வேண்டும்.

இந்த உருண்டை உமிழ் நீருடன் சேர்ந்து ரத்த ஓட்டத்தில் கலக்கும்.

இதேபோல, 3 மணி நேரத்துக்கு ஒரு முறை புதியதாகத் தயார் செய்த மருத்தை ஒரு நாளைக்கு 3 அல்லது 5 முறை கொடுக்க வேண்டும். தொடர்ந்து, 3 முதல் 5 நாள்கள்

வரை இந்த மூலிகை மருந்தை கொடுப்பதன் மூலம் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

கால் புண்: காலில் புண் இருந்தால், குப்பைமேனி, காட்டுத் துளசி அல்லது திருநீற்றுப் பச்சை செடிகளில் ஏதேனும் ஒரு செடியின் 100 கிராம் இலையுடன், பூண்டு 10 பல்கள், 100 கிராம் மஞ்சள் தூள் ஆகியவற்றை நன்றாக இடித்து 250 மிலி. நல்லெண்ணெய் அல்லது வேப்பெண்ணெயில் காய்ச்சி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடையின் கால் குளம்புகளில் தடவ வேண்டும்.

மருத்தைத் தடவுவதற்கு முன்பு, கால்நடையின் கால் குளம்புகளை உப்பு, மஞ்சள் தூள் கலந்த நீரில் நன்றாகக் கழுவி ஈரத்தை துடைக்க வேண்டும். கால் புண்ணில் புழுக்கள் இருந்தால் முதல் நாளில் கற்பூரம் சேர்த்து புண்ணில் தடவ வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் புழுக்கள் உருவாகுவது கட்டுப்படுத்தப்படும்.

இந்த மூலிகை மருந்தைப் பயன்படுத்துவதன் மூலம் கோமாரி நோய் கட்டுப்படுத்தப்பட்டு நல்ல பயனைத் தந்துள்ளது என தெரிவித்துள்ளார்

## பழக்கன்றுகள் விற்பனைக்குத் தயார்

பல்வேறு ரகப் பழக்கன்றுகள் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அந்த நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சாத்துக்கொடி, கமலா ஆரஞ்சு, நாரத்தை, எலுமிச்சை ஒட்டு ரகம், பலா (ரகம் - பாலூர் பலா), மாதுளை (ரகம் - கணேஷ், பகுவா), கொய்யா (ரகம் - லக்னெப் 49), சீமை இலந்தை, அத்தி, மா (ரகங்கள் - அல்போன்சா, நீலம், சேலம், பெங்களூரா) ஆகிய பழக்கன்றுகள் நடவு செய்து விற்பனைக்குத் தயாராக உள்ளன.

தவிர, காய்கறி விதைகளான தக்காளி, புடலை, பாகல், பூசணி, பரங்கி, சிறுகீரை, தண்டுக்கீரை, செடி முருங்கை, செடி அவரை விதைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் நாமக்கல்

மோகனூர் சாலையிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் முழுத் தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04286 -266345, 266244, 266650 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கோமாரியால் கால்நடைகள் இறப்பு: இழப்பீடு கேட்டு ஆர்ப்பாட்டம்

கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு தலா ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்க வலியுறுத்தி, மன்னார்குடியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், கோமாரி நோய் தாக்குதலிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க மருத்துவ நிபுணர்கள் குழு சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும். நோய் மேலும் பரவாமல் தடுக்க, இறந்த மாடுகளை முறையாகவும், பாதுகாப்பாகவும் புதைக்க ஆகும் செலவுத் தொகையை தமிழக அரசே ஏற்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

மன்னார்குடி கோட்டாட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ். துரைசாமி தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் பி. ரத்தினம், மாநிலக் குழு உறுப்பினர் ஜி. ரகுபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ஜி. சுந்தரமூர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் மன்னார்குடி பி. சந்திரகாசன், நீடாமங்கலம் சு. நாகூரான், கோட்டூர் ரகுபதி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

## பெரம்பலூரில் தொல்லியல் கல்வெட்டு கண்காட்சி தொடக்கம்

பெரம்பலூர் மாவட்ட மைய நூலகத்தில் 46-வது தேசிய நூலக வார விழாவையொட்டி தொல்லியல் கல்வெட்டு கண்காட்சி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட மைய நூலக அலுவலர் சி. அசோகன் தலைமை வகித்தார். வாசகர் வட்டத் துணைத் தலைவர் ப. செல்வகுமார் முன்னிலை வகித்தார்.

தொல்லியல் கல்வெட்டு கண்காட்சியை தொடக்கி வைத்த, அரியலூர் அரசு கலைக் கல்லூரி முதல்வரும், தொல்லியல் ஆராய்ச்சியாளருமான முனைவர் இல. தியாகராஜன் பேசியது:

10 கோடி ஆண்டுகளுக்கு முன் பெரம்பலூர் மாவட்டம் கடலாக இருந்து, நிலப்பகுதியாக மாறியதில் கடலில் வாழ்ந்த நத்தைகள், நட்சத்திர மீன்கள், கடல் குதிரைகள், கடலோர பகுதியில் இருந்த மரங்கள், டைனோசர் போன்ற விலங்குகள் பூமிக்குள் புதைந்து பாசில்கள் எனப்படும் கல்புதைப் படிவங்களாக மாறிவிட்டன.  இத்தகைய கல்புதை படிவங்கள் வைக்கப்பட்டுள்ளன. பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பழைய, புதிய கற்காலம், நுண் கருவிகள் காலம், இரும்புக் காலம் எனப்படும் பெருங்கற்காலம் ஆகிய காலங்களைச் சேர்ந்த கற்கருவிகள், கி.மு 3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்க காலத்தில் வாழ்ந்த தகடூர் மன்னனும், அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்து புகழ் பெற்ற வள்ளலுமான அதியமான் நெடுமான் அஞ்சியின் ஜம்பை கல்வெட்டும், அவரைப்பற்றி குஜராத் அருகே கிர்னார் பாறையில் மாமன்னன் அசோகர் எழுதிவைத்துள்ள கல்வெட்டும், கருவூரை ஆட்சி செய்த சேர மன்னர்களின் தமிழ் பிராமி கல்வெட்டுகளும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

பழனி அருகே உள்ள பொருந்தல் என்ற இடத்தில் பாண்டிச்சேரி பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத்தலைவர் டாக்டர் ராஜனின் அகழாய்வில் கிடைத்த நெல் மணிகள், எழுத்துப் பொறித்த பானைகள், யானை தந்தங்களால் செய்யப்பட்ட தாயக்கட்டைகள் ஆகியவற்றின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதேபோல, ஆதிச்சநல்லூர், உறையூர், அழகன்குளம், தாண்டிக்குடி, கொடுமணல், மாமல்லபுரம், சிந்து சமவெளி ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வு படங்களும் வைக்கப்பட்டுள்ளன. பல்லவர் கால வட்டெழுத்து கல்வெட்டுகள்,

ராஜராஜசோழன், குலோத்துங்கன், குலசேகர பாண்டியன், திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர் கல்வெட்டுகளின் படிவங்களும் இடம்பெற்றுள்ளன.

வாலிகண்டபுரம் கல்வெட்டு பிள்ளைவரம் கொடுத்தது, நொச்சியம் கல்வெட்டு சத்ரபதி சிவாஜி குறித்தும், திரணிபாளையம் கல்வெட்டு சுருதிமான்கள் குறித்தும், கொளக்காநத்தம் கல்வெட்டு திருமலை நாயக்கரையும் சித்தளி கல்வெட்டு போசளர் குறித்தும் தெரிவிக்கிறது. அரியலூர், உடையார்பாளையம், ஜமீன்தார்களின் கலவெட்டுகளும், படங்களும், சங்ககால காசுகள் மற்றும் ராஜராஜன், பாண்டியர், விஜயநகர மன்னர், நாயக்கர், ஆங்கிலேயர் காலத்து நாணயங்கள், ஓலைச் சுவடிகளும், ஆங்கிலேயர் காலத்தில் இருந்த தஞ்சை அரண்மனை, கோவில் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. 21ம் தேதி வரை நடைபெறும் கண்காட்சியை, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மட்டுமின்றி பொதுமக்களும் பார்த்து பயன்பெற வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், நல் நூலகர் கோ. சேகர், நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் கோபால், நூலகர்கள் நாகராணி, மகாலட்சுமி, சிவகாமசுந்தரி மற்றும் நூலக பணியாளர்கள் உள்பட மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வாசகர் வட்ட உறுப்பினர் துரைசாமி வரவேற்றார். மாவட்ட மைய நூலகர் பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

## நாகையில் 1-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு

நாகை துறைமுக அலுவலகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு செவ்வாய்க்கிழமை ஏற்றப்பட்டது.

சென்னைக்கு வடகிழக்கு திசையில் 700 கி.மீ தொலைவில் வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழி நிலை கொண்டிருப்பதையொட்டி, நாகை துறைமுக அலுவலகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது.

திடீர்க் காற்றுடன் மழை பெய்யக் கூடிய வானிலை ஏற்பட்டுள்ளது என்பதை அறிவிக்கும் தூர முன்னறிவிப்பாக இந்த எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது.

நாகை மாவட்டத்தில் திங்கள்கிழமை பலத்த மழை பெய்தது. செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக மயிலாடுதுறையில் 75.8 மி.மீ மழை பதிவானது.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழையளவு (மி.மீட்டரில்):

நாகை - 62. தரங்கம்பாடி- 42, திருப்பூண்டி- 37.6, தலைஞாயிறு- 31.6, கொள்ளிடம் (ஆணைக்காரன் சத்திரம்) - 24, வேதாரண்யம்- 22.8, சீர்காழி- 14.6, மணல்மேடு- 14.4. செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் குறிப்பிடத்தக்க அளவில் மழையில்லை.

**இலைச்சுருட்டு புழுவை கட்டுப்படுத்த யோசனை**

ஒரத்தநாடு அருகே உள்ள திருவோணம் பகுதியில் நெற்பயிரில் தென்படும் இலைசுருட்டு புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் சுப்பையா யோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

ஒரத்தநாடு அருகே திருவோணம் வட்டாரத்தில் அதம்பை, காயவூர், சென்னியவிடுதி, வெட்டிக்காடு, பின்னையூர் ஆகிய கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல்கள் காணப்படுகிறது.

எனவே பயிர்களில் புழுவின் தாக்குதல் அதிகமாக தென்பட்டால் யூரியா உரத்தை பிரித்தளிக்க வேண்டும். மேலும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அசார்டிராக்டின் மருந்தில் 1 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி வீதம் அல்லது மானோகுரோட்டபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம் அல்லது புரபனோபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம் அல்லது குளோர்பைரிபாஸ் மருந்தில் 1 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி வீதம் கைத்தெளிப்பான் மூலம் தெளித்தால் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதலை கட்டுபடுத்தி அதிக மகசூல் பெறலாம் என்றார்.

## கோமாரி பாதித்த கால்நடைகள் ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, இலுப்பூர் வட்டங்களைச் சார்ந்த கிராமங்களில் கோமாரியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை சென்னை கால்நடை

அறிவியல் பல்கலைக்கழக இயக்குநர், கால்நடைப் பராமரிப்புத் துறை கூடுதல் இயக்குநர் ஆகியோர் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

சென்னை கால்நடை அறிவியல் பல்கலைக்கழக கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் கே. குமணன், கால்நடைப் பராமரிப்புத் துறை கூடுதல் இயக்குநர் சண்முகம், மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை விடுதி ஊராட்சி அரசடிப்பட்டி கிராமத்திலும், கீழாத்தூர் ஊராட்சியில் வெப்6ளாக்குளம், சூரன்விடுதி ஆகிய கிராமங்களுக்கும் நேரில் சென்றனர்.

அங்கு கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதை பார்வையிட்டனர். மேலும், சுற்றுப்புறத்தை சுகாதாரத்துடன் பராமரிக்கவும், நோய் அறிகுறியுள்ள கால்நடை, கன்றுகள், பிற கால்நடைகளை தனியாகப் பிரித்துப் பராமரிக்கவும் பொதுமக்களிடம் இக்குழுவினர் அறிவுறுத்தினர்.

இதையடுத்து விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சியில் இவர்கள் ஆய்வு செய்தனர்.

ஆய்வுக்குப்பின் பொதுமக்களிடம் குழுவினர் கூறியது:

கோமாரி நோய் பாதிப்பு பகுதி கால்நடைகளுக்கு பல்வேறு சிகிச்சை மேற்கொள்வதுடன் அவற்றின் ரத்த மாதிரி, வாய்ப்புண் பகுதி, மற்றும் நோய் பாதித்த பகுதிகளிலிருந்து மாதிரிகள் எடுத்து பல்கலைக்கழகத்தின் நோய் புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு, கால்நடைகளுக்கு எந்த மாதிரியான நோய் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கால்நடைகளை நேரடியாக ஆய்வு செய்து பல்வேறு உயிரியியல் பாதுகாப்பு முறைகள் பற்றி கால்நடை வளர்ப்போருக்கு விரிவாக எடுத்துக் கூறும் பணிகளையும், நோய் பாதித்த பகுதி கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தனர்.

ஆய்வின்போது வெப்6ளாக்குளம் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைத்து தருமாறு பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுமீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக ஆட்சியர் தெரிவித்தார்.

ஊராட்சிகள் உதவி இயக்குநர் எல். பாலன், ஒன்றியக் குழுத் தலைவர் துரை. தனசேகரன், இணை இயக்குநர் (கால்நடைப் பராமரிப்பு) மகாலிங்கம், துணை இயக்குநர் மோகனரங்கன், கால்நடைப் பராமரிப்பு பல்கலைக் கழக பேராசிரியர் ரிச்சர்டுஜெகதீசன், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி இணைப் பேராசிரியர் பாலகிருஷ்ணன், பஷீர்அகமது, திருச்சி கால்நடைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டி. லூர்துரீட்டா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கால்நடைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும்-ஆட்சியர் உத்தரவு

கால்நடைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும் என்றார் கரூர் மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி.

கரூர் மாவட்டம் தாந்தோணி ஒன்றியம் ஆண்டாங்கோவில்(மேற்கு) ஊராட்சி கோவிந்தம்பாளையம் கிராமத்தில் காேமாரி நோய் தடுப்பு குறித்து சிறப்பு கிராமசபைக்கூட்டம் ஊராட்சித்தலைவர் முத்தம்மாள் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் பங்கற்ற மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி பேசுகையில், மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதலை தடுக்கும் வகையில் கால்நடைபராமரிப்புத்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து 28 குழுக்கள் அமைத்து மாவட்டம் முழுவதும் கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு, இதுவரை 1,65,000 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தடுப்பூசி போடாத மாடுகளுக்கு நோய் தாக்குதலுக்கு முன்கூட்டியே தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். தடுப்பூசி போட்டால் பால் குறையும் என்ற வதந்தியை நம்ப வேண்டாம். தற்போது தட்பவெப்ப நிலை மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை கொண்டு வருவதன் மூலம் கோமாரி நோய் பரவ அதிக வாய்ப்புள்ளது. நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை பராமரிப்பவர் மற்ற மாடுகளை தொடவே கூடாது. நமது மாவட்டத்தை பொறுத்தவரை கோமாரி நோய் தாக்குதல் என்பது மிக்குறைவு. நங்கவரம் பேரூராட்சி பகுதியில் நோய் தாக்குதல் ஆரம்ப அறிகுறி தென்பட்டது. தற்போது கால்நடைத்துறையின் உரிய நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் கோபிநாத், ஊராட்சி உதவி இயக்குநர் விஜயலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**பொன்னணியாறு அணைப் பகுதியில அதிக மழை**

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகிலுள்ள பொன்னணியாறு அணைப் பகுதியில் அதிகபட்சமாக 31.40 மி.மீ. மழை பெய்துள்ளது.

வங்கக்கடலில் ஏற்பட்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் சனிக்கிழமை நாகை மாவட்டத்தில் கரையைக் கடந்த நிலையில் தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமையைத் தொடர்ந்து, திங்கள்கிழமையும் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது.

குளிர்ந்த காற்றுடன் இதமான பருவநிலை காணப்பட்டது. திங்கள்கிழமை மாலை தொடங்கிய மழை தொடர்ந்து நள்ளிரவு வரை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக பொன்னணியாறு அணைப் பகுதியில் 31.40 மி.மீ. மழையும், குறைந்தபட்சமாக தா.பேட்டையில் 3.மி.மீ.மழையும் பதிவாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பெய்த மழையளவு விவரம் (மி.மீட்டரில்).

பொன்னணியாறு அணை - 31.40 மி.மீ, நந்தியாற்றுத் தலைப்பு -22, கல்லக்குடி - 21.2, கொப்பம்பட்டி -19, லால்குடி -17, புள்ளம்பாடி -15.60, சமயபுரம், தேவிமங்கலம், தென்பறநாடு -10, வாய்த்தலை அணைக்கட்டு -9.40,பொன்மலை - 9.40, , விமான நிலையம்- 7.70, திருச்சி ஜங்சன் -7, திருச்சி டவுன் - 6.80, நவலூர் குட்டப்பட்டு -6, மணப்பாறை -5.40, துறையூர் -4, தா.பேட்டை -3, மாவட்டத்தில் மொத்தமாக 241.90 மி.மீ. மழையும், சராசரியாக 9.68 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

**வேடந்தாங்கல் பறவைகள் சீசன் தொடங்கியது**





மதுராந்தகம் அருகே வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கும் சீசன் தொடங்கியுள்ளது. பொதுமக்கள் பார்வைக்கு இச்சரணாலயம் வெள்ளிக்கிழமை முதல் (நவ. 22) திறந்துவிடப்படுகிறது.

செங்கல்பட்டுக்கு தென்மேற்கில் செங்கல்பட்டு - உத்தரமேரூர் சாலையில் 25 கி.மீ. தொலைவில் உள்ளது வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.

ஆண்டுதோறும் அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை இங்கு வெளிநாட்டுப் பறவைகள் தங்கி முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்வது வழக்கம்.

நீர் நிறைந்த பகுதிகளில் பறவைகள் தங்கி ஓய்வு எடுக்கின்றன. வேடந்தாங்கல் பகுதியைச் சுற்றியுள்ள மதுராந்தகம், வெள்ளபுதூர், வளையபுதூர், உத்தரமேரூர், மலைவையாவூர் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் இருந்து வேடந்தாங்கல் ஏரிக்கு நீர்வரத்து செய்யப்படுகிறது.

கடந்த சிலநாள்களாக பெய்து வந்த கனமழை காரணமாக ஏரிகளில் இருந்து பெறப்படும் நீர் பொதுப்பணித் துறையினரால் கட்டப்பட்ட இரண்டு பெரிய கால்வாய்கள் வழியாக வந்து வேடந்தாங்கல் ஏரியின் நீர்மட்டத்தை கணிசமாக உயர்த்தியுள்ளது.

வேடந்தாங்கல் ஏரியில் நீர் நிரம்பியுள்ள நிலையில் சீசனும் தொடங்கிவிட்டது. பல தேசங்களில் இருந்து பறவைகள் வேடந்தாங்கலுக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளன. தற்போது வேடந்தாங்கலுக்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.கீழே சிறுத்தும் அகன்று விரிந்த கிளைகளும் கொண்ட கடம்ப மரங்கள்தான் இந்த பறவைகளின் தேர்வாக உள்ளது. பறவைகளுக்குப் பிடித்த இந்த கடம்ப மரங்கள் வேடந்தாங்கல் ஏரிப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. கூடுகட்டி வசிப்பதற்கு ஏற்றதாக உள்ளதால் பறவைகள் இப்பகுதியை தேர்ந்தெடுக்கின்றன.

இவற்றின் வரவை எதிர்நோக்கி வனத்துறையினர் அதிக எண்ணிக்கையில் கடம்ப மரங்களை வளர்த்துள்ளனர்.

மேலும் 73 ஏக்கர் பரப்பில் விரிந்துள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் இந்தியாவின் பழமையான நீர்ப் பறவைகளின் சரணாலயமாக விளங்குகிறது.

மேலும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஏரிக்குள் வளர்ந்துள்ள கடம்ப மரங்களில் கூடுகட்டி வாழும் பறவைகளை கண்டு களிக்கும் வகையில் ஏரிக்கரையோரமாக 1.4 கி.மீ. தொலைவில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க உயரமான பரண் அமைக்கப்பட்டு பைனாகுலர் மூலமாக பறவைகளை கண்ணருகில் பார்த்து ரசிக்கும் வசதியையும் வனத்துறையினர் செய்துள்ளனர்.

கனடா, சைபீரியா, பங்களாதேஷ், ஆஸ்திரேலியா ஆகிய குளிர்பிரதேச நாடுகளிலிருந்து மிகவும் அரிதான 26 பறவை வகைகள் உள்பட 45 ஆயிரம் பறவையினங்கள் இங்கு வந்து தங்கிச் செல்வது வழக்கம். கொக்கு வகைகள், நீர்காகங்கள், நாரைகள், வெள்ளை நாரை, கூழைக்கடா, நைட்ஹெரான், க்ரே ஹெரான், ஸ்பூன்பில், லிட்டில் எக்ரெட், ஒயிட் இபிஸ், கேட்டில் எக்ரெட், பின்டெய்ல் என்னும் ஊசிவால் வாத்து, டாப் சிக், ஷோவல்லர டக் உள்ளிட்ட பல்வேறு பறவைகள் தங்கள் நாட்டிலிருந்து வேடந்தாங்கலுக்கு வந்து தங்கி இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு விடைபெற்றுச் செல்கின்றன.

மேலும் குளிர் பிரதேசங்களில் இருந்து வரும் உள்ளான், பழுப்பு வாலாட்டி போன்ற பறவையினங்களுடன் உள்நாட்டுப் பறவைகளான வெள்ளை அரிவாள் மூக்கன், குருட்டு கொக்கு, நத்தை குத்தி நாரை போன்ற பறவைகளும் வேடந்தாங்கல் ஏரிக்கு வருகை தருகின்றன.இச்சரணாலயத்தில் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கும் சீசன் தொடங்கியுள்ள நிலையில், வனத்துறையினர் கட்டுப்பாட்டில் உள்ள இச்சரணாலயம் பொதுமக்கள் பார்வைக்கு வெள்ளிக்கிழமை முதல் திறக்கப்படுகிறது.


தங்கும் வசதிகள் தேவை:இச்சரணாலயத்துக்கு வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்காக குடிநீர் வசதி, கழிப்பிடம் மற்றும் பறவைகளை கண்டுகளிக்க கூடுதல் கோபுரங்களையும் அமைத்துள்ளனர்.

ஆனால் இங்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கையாகும்.

22 முதல் சரணாலயம் திறப்பு

வேடந்தாங்கல் நாட்டின் பழமையான நீர்ப் பறவைகள் சரணாலயமாகும். கனடா, சைபீரியா,ஆஸ்திரேலியா ஆகிய குளிர்பிரதேச நாடுகளிலிருந்து மிகவும் அரிதான 26 பறவை வகைகள் உள்பட 45 ஆயிரம் பறவையினங்கள் இங்கு வந்து தங்கிச் செல்வது வழக்கம்.

**வங்கக்கடலில் மீண்டும் புயல் சின்னம்**




வங்கக் கடலில் நிலைக் கொண்டுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று தீவிர காற்றழுத்த மண்டலமாக உருவெடுத்துள்ளது. இதனால் தமிழகத்தின் வட பகுதிகளில் பரவலாக இடியுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: மத்திய வங்கக் கடலின் தென்கிழக்குப் பகுதியில் அந்தமான் அருகே உருவான புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி தீவிரமடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது மேற்கு நோக்கி நகர்ந்து, சென்னையில் இருந்து 650 கி.மீ. தொலைவில் நிலைகொண்டுள்ளது. விசாகபட்டினத்தில் இருந்து 450 கி.மீ. தொலைவில் உள்ளது.

இந்த நிலையில் இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வியாழக்கிழமையன்று இரவு சென்னை - ஓங்கோல் (ஆந்திரம்) இடையே கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வு

மண்டலம் கரையை கடக்கும் போது பலத்த காற்று வீசும். ஆந்திரக் கடலோரம் மற்றும் வடதமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதன்கிழமை இரவு முதல் கனமழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலை கொண்டிருப்பதால், தமிழகம் மற்றும் புதுவை மீனவர்கள் எச்சரிக்கையுடன் கடலுக்குள் செல்லவேண்டும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

துறைமுகங்களில் எச்சரிக்கை கூண்டு: இந்த புயல் சின்னம் நெருங்கி வருவதால், சென்னை, புதுச்சேரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் பாம்பன் துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு செவ்வாய்க்கிழமை மாலை ஏற்றப்பட்டது. கடலோரப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அதிகாரிகள் வலியுறுத்தினர். கடலூர் துறைமுகப் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலையில் இருந்தே கடல் அதிக சீற்றத்துடன் காணப்பட்டது. கடல் கொந்தளிப்பாக இருப்பதால் கடலில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் 100 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): மயிலாடுதுறை - 80, காரைக்கால், குடவாசல் - 70, நாகப்பட்டினம், திருவாரூர், கழுகுமலை - 60, சிவகாசி, அம்பாசமுத்திரம், குன்னூர் - 50, தரங்கம்பாடி, மன்னார்குடி, அரியலூர், கள்ளக்குறிச்சி - 40, நன்னிலம், பாபநாசம், அரூர், தென்காசி, மேட்டுப்பாளையும், கொடைக்கானல், சேரன்மாதேவி, கும்பகோணம், திருவிடைமருதூர், பெரம்பலூர் - 30, சங்கரன்கோயில், சோழவந்தான், வேதாரண்யம், திருவையாறு, விராலிமலை, செஞ்சி, திருச்செங்கோடு, வாழப்பாடி, கோவை, திருக்கோவிலூர், ஜெயம்கொண்டான் - 20, தஞ்சாவூர், கோவில்பட்டி, சீர்காழி, ஆத்தூர், நாகர்கோயில், வால்பாறை, சாத்தான்குளம், ஒரத்தநாடு, மணிமுத்தாறு, விருதாச்சலம், திண்டுக்கல், சாத்தனூர் அணை, ஓமலூர், காங்கேயம், திருச்செந்தூர், செங்கோட்டை, வாணியம்பாடி, திருச்சி, ஏற்காடு - 10.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

20.11.2013

**மிளகாய் சாகுபடியில் சில ரகங்கள்**

ஹங்கேரியன் எல்லோ வேக்ஸ் என்று அழைக்கப்படும் இந்த ரகம் நவம்பர் மாதத்தில் சாகுபடியைத் துவங்கி ஏப்ரல் மாதம் வரை சாகுபடி செய்யலாம். இந்த ரகத்தின் செடி 75-80 செ.மீ. வரை உயரமாக வளரக்கூடியது. இதன் காய்கள் 15செ.மீ. - 16செ.மீ. நீளமும் 3 செ.மீ. கனமும் உடையது. காய்கள் மெழுகால் செய்தது போல் மஞ்சள் நிறத்தில் காட்சி அளிக்கும். காய்களின் காரம் குறைவாக இருக்கும்.

ஸ்வீட் பனானா என்று அழைக்கப்படும் இந்த ரகமும் பாப்ரிக்கா இனத்தைச் சேர்ந்தது. செடிகளின் உயரம் 75-80 செ.மீ. இருக்கும். காய்கள் நீளமாகவும் சாதாரண ரகங்களைப் போல் நுனி பாகம் பூமியை நோக்கி இருக்கும்படி காய்க்கும். இந்த ரகங்களின் தோல் மெல்லியதாகவும், காரம் குறைந்ததாகவும் இருக்கும். ஒவ்வொரு ரகங்களையும் 10 சென்ட்டில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நன்கு கவனித்து ரசாயன உரம், மக்கிய உரம் இவைகள் தாராளமாக இடப்பட்டன. செடிகள் பூச்சி வியாதியால் பாதிக்கப்படவில்லை. ஹங்கேரியன் செடிகளில் காய்ப்பு சரியில்லை. ஸ்வீட் பனானா நன்கு காய்த்தது. வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்கினார்கள். சாகுபடி குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சாகுபடி குறிப்புகள் - ஹங்கேரியன் எல்லோ வேக்ஸ், ஸ்வீட் பனானா

**10 சென்ட் பரப்பு:** விதை அளவு-10 கிராம்; நாற்றங்கால்-நீளம் 2 அடி, அகலம் 1 அடி, உயரம் 10 செ.மீ.,; நாற்றின் வயது -45 நாட்கள்; தொழு உரம்-600 கிலோ; அடி உரம் - காம்ப்ளக்ஸ் - 25 கிலோ. மேலுரம் - முதல் அறுவடைக்குப் பின் யூரியா 10 கிலோ போதுமான அளவு பாசனம் தர வேண்டும். அறுவடை நட்ட 75-80 நாட்களில் முதல் அறுவடை 10 சென்ட் சாகுபடி செலவு - ரூ.2,425.00.

**ஹங்கேரியன் எல்லோ வேக்ஸ்**: 10 சென்ட்டில் கிடைத்த 450 கிலோவின் மதிப்பு ரூ.3,150.00; நிகர லாபம் - ரூ.725.00.

**ஸ்வீட் பனானா**: 10 சென்ட்டில் கிடைத்தது 700 கிலோவின் மதிப்பு ரூ.4,900.00, நிகர லாபம் - ரூ.2,475.00

மேலே கொடுக்கப்பட்டுள்ள 10 சென்ட்டில் கிடைத்த அனுபவம் உற்சாகம் அளிக்கின்றது. இந்த விவரம் உற்சாகம் தருவதால் விவசாயிகள் அதிக பரப்பளவில் சாகுபடி செய்து லாபம் எடுக்கலாம்.
இந்த ரகங்களுக்கு அதிக அளவில் கிராக்கி இருப்பதால் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் இந்த மிளகாய் ரகங்களை விரும்பி வாங்குகிறார்கள். ஓசூரிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் காய்கறி சாகுபடி திறமையாக செய்யப்படுகின்றது. விவசாயிகள் காய்கறிகளை நல்ல விலைக்கு விற்றுவிட்டு தங்கள் சாகுபடியில் தயாரித்த விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.
கட்டுரையைப் படிக்கும் விவசாயிகள் மேலே கூறப்பட்டுள்ள ஹங்கேரியன் எல்லோ வேக்ஸ் மற்றும் ஸ்வீட் பனானா மிளகாய் ரகங்களை சாகுபடி செய்து நல்ல பலன் அடையலாம்.
**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**இயற்கை பண்ணை** : சுமார் 60 ஏக்கர் நிலத்தில் பரந்து விரிந்திருக்கிறது ஆர்கே இயற்கை பண்ணை. இதில் தென்னை, பர்மா தேக்கு, மகோகனி, மலைவேம்பு, மேஞ்சியம் என பலவகை மரங்களைப் பராமரித்து வருகின்றனர். தென்னை மரங்களுக்கு இடையில் 2.5 அடி ஆழம் மற்றும் 3 அடி அகலத்தில் வாய்க்கால் அமைத்து அதில் மண்புழு உரம், மாட்டுச்சாணம், தென்னை ஓலை மற்றும்



உரிமட்டைகளைப் போட்டு அதன் அருகில் சொட்டுநீர்க்குழாய் அமைத்து உள்ளதால் தென்னை ஓலையும் உரிமட்டையும் ஈரப்பதத்தை எப்போதும் நிலைநிறுத்தி வைத்துக்கொள்கிறது. இந்த வாய்க்கால் இரண்டு தென்னை வரிசைக்கு இடையில் உள்ளதால் இரண்டு பக்கமும் உள்ள மரங்களின் வேர்கள் உரத்தன்மையையும் நீரையும் எளிமையாகக் கிரகித்துக் கொள்கின்றன. இதனால் இங்குள்ள மரங்கள் எப்பொழுதும் பசுமையாக இருப்பதுடன் கூடுதலான மகசூலும் தருகிறது. மழைக்காலங்களில் கிடைக்கும் நீரை இந்த வாய்க்கால்கள் அப்படியே சேமித்து வைத்துக்கொள்கிறது.
இயற்கை பண்ணை என்றால் அங்கு நாட்டு மாடுகள் நிச்சயம் இருக்க வேண்டும். 15 மாடுகள் பராமரித்து வருகிறார்கள். பண்ணைக்குள் சாணக்குழிகள் அமைத்து மாடுகளின் சணத்தையும் கோமியத்தையும் சேகரிக்கிறார்கள். சாணக்குழிக்குள் ஜீவாமிர்தம், தசகவ்யம் போன்றவற்றை இட்டு, திரவ நிலையில் உள்ளதை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் மரங்களுக்கும் மரப்பயிர்களுக்கும் இடுகிறார்கள். சாணக்கழிவிலிருந்து இயற்கை எரிவாயு தயாரித்து சமயத்துக்கு பயன்படுத்துகிறார்கள்.
பண்ணையில் ஆங்காங்கே இத்தாலிய தேனீப் பெட்டியையும் அமைத்துள்ளார்கள். பல இடங்களில் இனக்கவர்ச்சிப் பொரிகளையும் வைத்திருக்கிறார்கள். மலைவேம்பு மரங்களுக்கு இடையில் தென்னை நாற்றுப்பண்ணை அமைத்திருக்கிறார்கள். மேலும் விபரங்களுக்கு: "ஆர்கே இயற்கை பண்ணை பிரைவேட் லிமிடெட், 5/383, ஆர்கே எஸ்டேட் (கணபதிகவுண்டர் தோட்டம்), கணுவாய்-பன்னிமடை சாலை, கோவை-641 108. போன்: 98439 55522.
(உரிமையாளர்: சிவசங்கர், பண்ணை மேலாளர், சுவாமிநாதன்)

*** வாழை சாகுபடியாளர்கள் கவனத்திற்கு** : திருச்சி, கரூர், புதுக்கோட்டை, கோவை, ஈரோடு, சேலம், திருவண்ணாமலை, வேலூர், செங்கல்பட்டு போன்ற வாழை சாகுபடி பகுதிகளில் வாழைமரங்கள் 4 முதல் 5 மாத வளர்ச்சிப் பருவத்தில் உள்ளன. மரம் ஒன்றுக்கு 200 கிராம் யூரியா, 300 கிராம் பொட்டாஷ், 20 கிராம்

பென்டோனைட், சல்பர், 50 கிராம் டோலமைட் போன்ற உரங்களை மரத்திலிருந்து 1.5 அடி தள்ளி கிண்ணம்போல் குழிபறித்து இடவேண்டும். அத்துடன் மரம் ஒன்றுக்கு 30 கிராம் பியூரடான் குருணை மருந்தை 5 கிலோ மக்கிய தொழு உரத்தையும் சேர்த்து இடவேண்டும்.
மேலும் திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் கிடைக்கும் "பனானா சக்தி' என்னும் வாழை நுண்ணூட்டச்சத்து கலவையை 2 சத கரைசலாக தகுந்த ஒட்டும் திரவம் சேர்த்து இலைமேல் தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வாழையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20,000 முதல் 25,000 வரை கூடுதல் வருவாய் ஈட்டலாம் என்று திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குனர் முனைவர் எம்.எம்.முஸ்தபா தெரிவிக்கிறார். மேலும் விபரங்களுக்கு: இயக்குனர், தேசிய வாழை ஆராய்ச்சி மையம், தாயனூர் அஞ்சல், தோகைமலை சாலை, திருச்சிராப்பள்ளி-620 102 மற்றும் இம்மையத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் கே.ஜே.ஜெயபாஸ்கரனை 93445 53587 அல்லது 99407 88015 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

நெற்பயிர் தற்போது அனைத்து பருவங்களிலும் உள்ளது. முதல் போகம் பயிரிடப்பட்டுள்ளது. அறுவடை பருவத்திலும் ஒருபோக சாகுபடி நெல் நாற்றாங்கால் நடவுப்பருவத்திலும் உள்ளன. தற்போது நிலவி வரும் தட்பவெப்ப நிலையில் நெற்பயிரில் பூச்சி, நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அவற்றை தடுத்து நெல் மகசூல் பெற விவசாயிகள் முயற்சிக்க வேண்டும்.

**இலை சுருட்டுப்புழு:** இப்புழுக்கள் இலைகளின் பச்சையத்தை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும். இலைகள் நீள்வாக்கில் சுருண்டு புழுக்கள் அதனுள் இருக்கும். இதனை தடுத்திட வரப்புகளை சீராக்கி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வேப்பங்கொட்டை சாறு (5 சதவீதம்) அல்லது வேப்பெண்ணெய் (3 சதவீதம்) ஆகியவற்றை தெளிக்க வேண்டும். பொருளாதார சேத நிலையை பொறுத்து ஒரு ஏக்கருக்கு 400 மில்லி "மோனோ குரோட்டோபாஸ்' அல்லது "டைக்குலோரோபாஸ்' 100 மில்லி தெளிக்கலாம்.

**கதிர் நாவாய்ப்பூச்சி:** இப்பூச்சிகள் பால் பருவத்திலிருக்கும் நெல் மணிகளிகளிலிருந்து சாறு உறிஞ்சும். தீவிர பூச்சி தாக்குதலின் போது முழு தானியம் கதிரும் தாக்கப்பட்டு நெல் மணிகள் முதிர்ச்சியடையாமல் போய் விடும்.

இதைத்தடுக்க வசம்பு பொடியை (அக்கோரஸ் காலமஸ்), ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் 90 கிலோ சாம்பல் கலந்து தூவலாம். பொருளாதார சேதநிலையில் ஏக்கருக்கு "மாலத்தியான்' (50 இசி) 200 மில்லி அல்லது "பென்தியான்' (100 இசி) 200 மில்லி என்ற அளவில் காலை 9 மணிக்கு முன்னர் அல்லது மாலையில் தெளிக்க வேண்டும்.

**புகையான்:** புகையான் தாக்கப்பட்ட பயிர்கள் தீய்ந்து மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாக காணப்படும். முதிர்ச்சியடைந்த பயிர்கள் காய்ந்து வட்டமான திட்டுகளாக காணப்படும். பயிர்களும் சாய்ந்து விடும். நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர் பூச்சிகள் ஒட்டிக் கொண்டிருக்கும். புகையான் தாக்குதலைத் தவிர்த்திட தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களை பயன்படுத்துதலை தவிர்த்தல் வேண்டும். வெள்ளைத்தன்மையுடைய விளக்கு பொறிகளை 1 முதல் 2 மீட்டர் உயரத்தில் பொருத்தி பூச்சிகளின் தொகையை கண்காணிக்க வேண்டும். வயலில் உள்ள தண்ணீரினை வடித்த பின், ஏக்கருக்கு "இமிடாகுளோபிரிட்' 50 மில்லி அல்லது "பாஸ்லோன்' 600 மில்லி என்ற அளவில் மருந்துகளை கைத்தெளிப்பானைக் கொண்டு தெளிக்க வேண்டும்.

**குலைநோய்:** குலைநோய் பூசணத் தாக்குதலால் ஏற்படுகிறது. பயிரின் அனைத்து பகுதிகளும் தாக்க வாய்ப்புள்ளது. தீவிர தாக்குதலின் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்றமளிக்கும். இந்நோய் தாக்குதலை வரும்முன் தவிர்த்தல் நல்லது. "குடோமோனாஸ்' துகள் கலவையினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் அளவில் 400 மில்லி தண்ணீரில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நாற்றாங்காலில் இரண்டரை கிலோ சூடோமோனாஸ் பொடியை நன்கு கலக்க வேண்டும். சூடோமோனாஸ் கலந்த நீரில் நாற்றுக்களை 30 நிமிடங்கள் ஊறவைத்து நடவு செய்ய வேண்டும். நட வுக்கு 45 நாட்களுக்கு பின் 10 நாட்கள் இடைவெளிகளில் 0.5 சதவீதம் சூடோமோனாஸ் கரைசலை மூன்று முறை தெளிக்க வேண்டும். ஏக்கர் ஒன்றிற்கு "எடிபன்பாஸ்' 200 மில்லி அல்லது "மேன்கோசெப்' 400 கிராம் அல்லது "கிட்டாச்சின்' 100 கிராம் அல்லது "டிரைசைக்ளோசெல்' 150 கிராம் தெளிக்கலாம்.

பூச்சி, நோய் தாக்குதல் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டும். விவரங்களுக்கு மதுரை மெற்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

**- கட்டுரையாளர்:**

**உதவி இயக்குனர் வடிவேல்குமார்,**

**மேற்கு வட்டார வேளாண் துறை, மதுரை.**

## ஒரே வாரத்தில் மிளகு கிலோவுக்கு ரூ.140 உயர்வு



சேலம்:தமிழக சந்தைகளுக்கு மிளகு வரத்தில் சரிவு ஏற்பட்டதை அடுத்து, ஒரே வாரத்தில், இதன் விலை கிலோவுக்கு, 140 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் மிளகு, மருத்துவ பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**கொடைக்கானல்:**தமிழகத்தின் மலைப்பிரதேசங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, கம்பம், தேனி, கன்னியாகுமரிமாவட்டங்களில், அதிக அளவில் மிளகு பயிரிடப்படுகிறது.

தமிழகத்தில் மிளகுபயிரிடப்பட்ட போதிலும், தேவையை பூர்த்தி செய்வதில், கேரளாவே அதிக பங்கு வகிக்கிறது.

கேரளாவில் இருந்து மிளகு வரத்து அதிகரித்தால் மட்டுமே, தமிழகத்தில் மிளகு விலை கட்டுக்குள் இருப்பது வழக்கம்.ஆனால், கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு விற்பனைக்கு வரும் மிளகு வரத்தில், கடந்த ஒரு மாதமாக சரிவு ஏற்பட்டு உள்ளது.இதனால், தமிழக சந்தைகளில் மிளகுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மிளகின் விலை, ஒரே வாரத்தில், கிலோவுக்கு, 140 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.கடந்த வாரம், 52 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையான, ஒரு குவிண்டால் முதல்

ரகம் மிளகு,

தற்போது, 66 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இதே போல், இரண்டாம் ரகம், 48 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது, 62 ஆயிரம் ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 45 ஆயிரம் ரூபாய்க்கு

விற்றது, 59 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது.மொத்த விலையில் உயர்வு ஏற்பட்-டதை அடுத்து, சில்லரை விலை கிலோவுக்கு, 140 ரூபாய் முதல், 160 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.

இரண்டாம் ரகம்:முதல் ரகம் மிளகு கிலோ, 680 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் கிலோ, 642 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 600 ரூபாய்க்கும் விற்பனையாகி-றது.மிளகுவரத்து எதிர்பார்த்த அளவு இல்லாததால், விலை மேலும் உயர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## நாட்டின் வேளாண் உற்பத்தி 5.7 சதவீதமாக வளர்ச்சி காணும்



புதுடில்லி,: நடப்பு, 2013 – 14ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சி, 5.2 – 5.7 சதவீதம் என்ற அளவில் இருக்கும். இது, கடந்த நிதியாண்டை விட, 3 மடங்கு அதிகம் என, வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையம் (சி.ஏ.சி.பி.,) வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நடப்பு வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்), பல மாநிலங்களில் பருவமழை பொழிவு நன்கு இருந்ததையடுத்து, சாகுபடி பரப்பளவு அதிகரித்து உள்ளது. இதையடுத்து,

நடப்பாண்டில், வேளாண் உற்பத்தி புதிய சாதனை அளவை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
இதன் காரணமாக, நடப்பு நிதியாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 5.2 – 5.7 சதவீதமாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.கடந்த நிதியாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 1.9 சதவீதம் என்ற அளவில், மிகவும் சரிவடைந்து காணப்பட்டது.சாதகமான தட்பவெப்ப சூழல் உள்ளதால், கடந்த, 20 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, நடப்பு நிதியாண்டில், வேளாண் மகசூல் சிறப்பான அளவில் அதிகரிக்கும் என, சி.ஏ.சி.பி., புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## வேகமா பரவுது கோமாரி! அறிகுறிகளை அலட்சியம் செய்தால் ஆபத்து

பொள்ளாச்சி:""கோமாரி நோய் அறிகுறிகள் தெரிந்தவுடன், தாமதிக்காமல் அருகிலுள்ள கால்நடை டாக்டர்களை அணுக வேண்டும்'' என, கால்நடை பராமரிப்புதுறை உதவி இயக்குனர் நாகராஜன் பேசினார்.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில், "கோமாரி மற்றும் டெங்கு நோய் தடுப்பு முறைகள்' குறித்த கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. தெற்கு ஒன்றிய சேர்மன் உமா மகேஸ்வரி தலைமை வகித்தார். இந்நோய்கள் குறித்து ஊராட்சித்தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு விளக்கப்பட்டன. கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் நாகராஜன் பேசியதாவது: கால்நடைகளுக்கு வைரஸ் மூலம் கோமாரி நோய் பரவுகிறது. பாதிக்கப்பட்ட கால்நடைகளின் எச்சில், சாணம், பால் மற்றும் சிறுநீரில் இருந்து கிருமிகள் வெளியேறுகின்றன. நோய் தாக்கிய உடன், முதல் நாளில் காய்ச்சல் ஏற்படும். இலைதழைகளை உண்ண மறுக்கும்.

வாய் மற்றும் பால் கரக்கும் மடியில் கொப்பளங்கள் வரும். நாக்கு மற்றும் மூக்கு துவாரங்களில் கொப்பளங்கள் ஏற்படும். இந்த அறிகுறிகள் இருந்தால், உடனடியாக அருகிலுள்ள கால்நடை
மருந்தகங்களை அணுகவும். இந்த நோய் வராமல் தடுத்திட, ஆறு மாதத்துக்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும். சினை மாடுகளுக்கும், ஆறுமாதத்திற்கு கீழ் உள்ள கன்றுக்குட்டிகளுக்கும், கோமாரி தடுப்பூசி போடலாம்.
விடுபட்ட கால்நடைகளுக்கு, அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போதிய மருந்துகள் இருப்பில் உள்ளன.
பிற மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை வாங்குவதை தவிர்க்க வேண்டும். நோயுற்ற மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல், தனிமைப்படுத்த வேண்டும். மாட்டுத்தொழுவத்தில் 30 கிராம் சோடியம் கார்பனேட்டை, ஒரு பக்கெட் நீரில் கலந்து கிருமிநாசினியாக தொழுவத்தில் தெளிக்க வேண்டும். கால்நடைகளுக்கு எந்த நோய் தாக்கினாலும், கால்நடை மருத்துவர்களுக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார். தொடர்ந்து, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்து கஞ்சம்பட்டி, கோலார்பட்டி, ஜமீன் ஊத்துக்குளி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் விளக்கினர். கூட்டத்தில், தெற்கு ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சித்தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு: நோய் எதிர்ப்பு உணவான "ராகி கூழ்'

ஈரோடு: கோமாரி நோயா ல் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு உணவாக, ராகி கூழை வழங்குகின்றனர்.
ஈரோடு, திருப்பூர், நாமக்கல் உட்பட பல மாவட்டங்களில் மாடுகளை கோமாரி

நோய் தாக்கி வருகிறது. தடுப்பூசி போடாத, உரிய சிகிச்சை அளிக்காத மாடுகள் உயிரிழக்கின்றன. நோய் பாதித்த மாடுகளுக்கு வாய், தொண்டையில் ஏற்படும் புண்ணால் திட, திரவ உணவுகளை உட்கொள்ள மறுக்கின்றன. இதனால் நாளடைவில் சோர்வடைகிறது. மாட்டின் உடலில் செலுத்தும் மருந்துகளால், பயன் ஏற்படாமல் போகிறது.

நோய் பாதித்த மாடுகள், உடலில் சக்தியோடு இருப்பது அவசியம். இதற்கு குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு முறை மாட்டுக்கு "தீனி' கொடுக்க வேண்டும். அப்போது தான் மருந்துகளால் நோய் குணமாகும், என்று கால்நடை மருத்துவர்கள் தொடர்ந்து விவசாயிகளிடம் வலியுறுத்துகின்றனர்.

தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் ராகி யை அரைத்து மாவாக்கிய பின், கூழாக்கி சூட்டை ஆற வைத்து, அதனை பாட்டிலில் ஊற்றுகின்றனர். அத னை மாட்டின் வாயை திறந் து சிறிது, சிறிதாக கட்டாயமாக ஊட்டுகின்றனர். மாட் டை காக்க விவசாயிகள் தினமும் காலை, மா லை என இரு வேளைகளிலும் மருத்துவர் ஆலோசனைப்படி வழங்கி வருகின்றனர்.

இது தவிர வேப்பம்பட்டை, வேலம்பட்டை யை உடைத்து அரைத்து, அதில் தேங்காய், வெந்தயம், பூண்டு, சீரகத்தை, நாட்டு சர்க்கரையுடன் சேர் த்து உருண்டை பிடித்து நோய் பாதித்த மாட்டுக்கு வலுக்கட்டாயமாக ஊட்டுகின்றனர். இவ்வாறு தொட ர்ந்து செய்தால் மாட்டின் உடலில் சக்தி கூடுவதுடன், தொண்டை, வயிறு உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட புண் விரைவில் பூரண குணம் பெறும் என்று விவசாயிகள் நம்புகின்றனர்.மாடுகளை காப்பாற்ற பெரும்பாலான விவசாயிகளும் இந்த முறையை கையாண்டு, மாடுகளுக்கு உணவு மற்றும் மருந்துகளை அளிக்கின்றனர்.

## மாடு மேய்க்கும் ரோபோ: ஆஸ்திரேலியா வடிவமைப்பு

லண்டன்: ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் தயாரித்துள்ள, மாடுகள் மேய்க்கும், நான்கு கால் "ரோபோ' விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. வீட்டு வேலை முதல் விண்வெளி ஆய்வு வரையிலான, அனைத்து பணிகளையும் செய்ய, "ரோபோ'க்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இந்த வரிசையில் தற்போது,

ஆஸ்திரேலியாவின், சிட்னி பல்கலைக் கழக விஞ்ஞானிகள், மாடுகளை மேய்க்கும் ரோபோக்களை உருவாக்கியுள்ளனர். "ரோவர்' என்று பெயரிடப்பட்டு உள்ள இந்த ரோபோ, காலையில் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வது முதல், மாலையில் பண்ணைக்கு அழைத்து வந்து, பால் கறப்பது வரையிலான அனைத்துப் பணிகளையும் செய்கிறது. நிதானமான வேகத்தில், இந்த ரோபோ செல்வதால், மாடுகள் அதைப் பின் தொடர்ந்து செல்கின்றன. பால் கறப்பதற்கு, ஏற்கனவே ரோபோக்கள் இருந்தாலும், பால் கறக்கும் பணியில், ரோவரின் செயல்பாடு குறித்து ஆராயப்பட்டுள்ளது. பழ மரங்கள் மற்றும் விவசாய பண்ணைகளை கண்காணிப்பதற்கு, ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ""தற்போது, இந்த ரோபோவை, மனிதர்கள் இயக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது; வருங்காலங்களில், சுயமாக இயங்கும் வகையில், ரோபோக்கள் மேம்படுத்தப்படும்," என, சிட்னி பல்கலை கழக விஞ்ஞானி, கேன்ட்ரா கெரிஸ்க் கூறியுள்ளார்.

## 22ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வரும், 22ம் தேதி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற உள்ளது திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வரும், 22ம் தேதி, பகல், 11:00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர், தலைமையில் நடைபெற உள்ளது. கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக் கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், கூட்டத்தில் கலந்து கொண்டு

பயன்பெற வேண்டுமாறு, மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ், கேட்டுக் கொண்டுள்ளார்.

## பருவநிலை மாற்றத்தால் நெற்பயிர்களில் நோய் தாக்குதல்...ஆரம்பம்! பாதிப்பை தவிர்க்க வேளாண் துறை ஆலோசனை

பொன்னேரி:பருவநிலை மாற்றத்தால், நெற்பயிர்களில், நோய் தாக்குதல் ஆரம்பமாகி உள்ளது. பாதிப்பு ஏற்படாமல் இருக்க, விவசாயிகள் வேளாண்மை துறையின் ஆலோசனைகளை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.
மீஞ்சூர் ஒன்றியத்தில், 28,287 ஏக்கர் பரப்பளவில், சம்பா பருவத்திற்காக பாபட்லா பொன்னி 5204, வெள்ளை பொன்னி, ஆகிய நெல் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர்.
கடந்த, ஜூலை மாதம் நடவுப் பணிகள் தொடங்கி, மூன்று முறை, களை எடுக்கும் பணிகளும் முடிந்துவிட்டன. இந்நிலையில், நெற் பயிர்களில், இலை கருகல், கதிர் இழை உறை அழுகல் நோய், நெல் குலை நோய், இலை சுருட்டுப்புழு, குருத்துப்பூச்சி ஆகிய நோய்களின் தாக்குதல் ஆரம்பம் ஆகி உள்ளது.
இந்நோய் தாக்குதலால், நெற்பயிர்களின் இலைகள், மஞ்சள் நிறத்திலும், கருகிய நிலையிலும் காணப்படுகின்றன. நெற்பயிர்களின் தண்டு பகுதியில் புழுக்கள் துளையிட்டு, குருத்துக்கள் காய்ந்த நிலையில் உள்ளன. இதனால், நெற் பயிர்களின் வளர்ச்சி குறைந்து உள்ளது.
கடந்த ஆண்டு 800 ஏக்கர் பரப்பளவில் நோய் தாக்குதல் இருந்தது. இந்தாண்டு, எங்கெங்கு பாதிப்பு உள்ளது என, வேளாண்மை துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.
மாவட்டத்தில், ஈக்காடு, எல்லாபுரம், பெரியபாளையம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய பகுதிகளில் நோய் தாக்குதல்கள் உள்ளன.
பருவ நிலை மாற்றத்தால்...
இது குறித்து, மீஞ்சூர் ஒன்றிய வேளாண்மை துறை உதவி இயக்குநர் ரேவதி கூறுகையில், 'ஒன்றியத்தில், மெதுார், கோளூர், ஆவூர், வேம்பேடு, அனுப்பம்பட்டு

உள்ளிட்ட இடங்களில் இந்நோய் தாக்குதல்கள் உள்ளன. கடந்த, 15 தினங்களாக காற்றின் ஈரப்பதம் அதிகரித்து உள்ளது. இது கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்ததை விட சற்று கூடுதலாகும்,' என்றார்.

மேலும், 'வெப்ப அளவும் குறைந்து உள்ளது. இந்த இயற்கை மாற்றங்களால், நெற் பயிர்களில், நோய் தாக்குதல்கள் ஆரம்பம் ஆகியுள்ளன. நோய் தாக்குதல் குறித்து, விவசாயிகள் எங்களை தொடர்பு கொண்டால், நேரில் பார்வையிட்டு உரிய ஆலோசனை வழங்க தயாராக உள்ளோம்,' என்றார்.

நோய்கள் மற்றும் ஆலோசனை

பாக்டீரியல் இழை கருகல் நோய்: தழைச்சத்து உபயோகம் குறைப்பதுடன், ஸ்ரெட்டிரோ மைசின் சல்பேட் , ஸ்ரெட்டிரோ சைக்களின் (18 கிராம்/ ஒரு ஏக்கருக்கு), மற்றும் காப்பர் ஆக்ஸி குளோரைடு (500 கிராம்/ஒரு ஏக்கருக்கு) கலவையை தெளிக்க வேண்டும்.

குருத்து பூச்சி நோய் மற்றும் இலை சுருட்டு புழு: இதை கட்டுப்படுத்த, கார்ட்டா ஹைட்ரோ குளோரைடு (400 கிராம்/ஒரு ஏக்கருக்கு) தெளிக்க வேண்டும். கதிர் இழை உறை அழுகல் நோய் மற்றும் நெல் குலை நோய்: கார்பன்டெசிம் (அல்லது) டிரை சைக்குளோசோல் (100 மி.லி./ஒரு ஏக்கருக்கு) தெளிக்க வேண்டும்.

தொடர்புக்கு...

வேளாண்மை விரிவாக்க அலுவலர், அலைபேசி எண்: 88833 68510, துணை வேளாண்மை விரிவாக்க அலுவலர், அலைபேசி எண்: 99402 07695.

## தோட்டக்கலை பண்ணையில் குமிழ் தேக்குகள் தயார்

காஞ்சிபுரம்:விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையில், குமிழ் தேக்கு கன்றுகள் மானிய விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளன.

காஞ்சிபுரம், விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலையில், குமிழ் தேக்கு கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள், இந்த தேக்கு கன்றுகளை வாங்கி சென்று பயனடையலாம். விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை அலுவலர் ராஜகிரி கூறுகையில், "மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து, பூமி குளிர்ந்த நிலையில் உள்ளது. குமிழ் தேக்கு கன்றுகளை, இப்போது நடவு செய்தால் வேர்கள் நன்கு பிடித்து வளரும். நடவு செய்த, ஏழாவது ஆண்டில், இவை அறுவடைக்கு தயாராகி விடும். வாரத்திற்கு ஒரு முறை கால்வாய் அல்லது பாத்தி மூலம் தண்ணீர் பாய்ச்சலாம். மானிய விலையில், ஒரு தேக்கு கன்றை, 5 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்," என்றார்.

## உரக்கடைகளில் ஆய்வு வேளாண் துறை அதிரடி

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்ட உரக்கடைகளில், வேளாண் அதிகாரிகள் ஆய்வு நடத்துவது, தொடரும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.பருவ மழையால், விவசாயப்பணிகள் துவங்கியுள்ளன. இதை அடுத்து, உரங்கள் மற்றும் பூச்சி மருந்து உள்ளிட்டவை, கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என, கண்காணிக்கும் படி வேளாண்துறை அதிகாரிகளுக்கு, காஞ்சிபுரம் ஆட்சியர் பாஸ்கரன் உத்தரவிட்டார். வேளாண் அதிகாரிகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உரக்கடைகளில், தரக்கட்டுபாட்டு விதிகள் பின்பற்றப்படுகிறதா என, ஆய்வு மேற்கொண்டனர். பவுஞ்சூர், காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளில், விதிமீறல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உரக்கடைகளில் நடத்தப்படும் திடீர் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறும் என, வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகளிடம் நேரடி நெல் கொள்முதல் : தேசியவாத காங்., தலைவர் வலியுறுத்தல்

புதுச்சேரி : விவசாயிகளிடமிருந்து இந்திய உணவுக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என தேசியவாத காங்., வலியுறுத்தியுள்ளது. இது குறித்து அக்கட்சியின் தலைவர் சுந்தரமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை: புதுச்சேரியில் உரவிலை ஏற்றம், உரத்தட்டுப்பாடு, விவசாயப்பணிக்கு ஆள் பற்றாக்குறை விவசாய பணி செய்வதற்கு கூலி உயர்வு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் தீவிரம் காட்டுவதில்லை. மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு விற்பனைக்குக் கொண்டு வரும்போது இடைத்தரகர்கள் கூட்டு சேர்ந்து அவர்களுக்குள்ளாக விலை நிர்ணயம் செய்து அடிமாட்டு விலைக்கு கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைகின்றனர். தற்போது மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு 1250 ஆக உயர்த்தியுள்ளது. இந்த விலை விவசாயிகளுக்கு போய் சேருவதற்கு இந்திய உணவுக் கழகம் நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை ஒற்றை அவியல் அரிசியாக்கி மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். இப்படி அரசு செயல்படுவதன் மூலம் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை கிடைக்கும். மில் அதிபரிடம் கொள்முதல் செய்யப்பட்ட தரமற்ற அரிசியால் அரசுக்கு ஏற்படும் இழப்பு, அவப்பெயர் தடுத்து நிறுத்த முடியும். எனவே அரசு இது தொடர்பாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பூக்கள் விலை "கிடுகிடு' உயர்வு

கடலூர்:பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் விலை "கிடுகிடு' வென உயர்ந்துள்ளது.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவில்கள், வீடுகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் சுவாமிக்கு பூஜைகள் செய்வதற்காக பூக்கள் பயன்படுகிறது. இதனால் பூக்கள் தேவை அதிகரித்ததுள்ளது. இதனையொட்டி கடலூர், திருப்பாதிரிப்புலியூரில் உள்ள பூ மார்க்கெட்டில் சேலம், பெங்களூரு, ஓசூர் உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு விதமான பூக்களை விற்பனைக்காக வியாபாரிகள் தங்கள் கடைகளில் குவித்து வைத்திருந்தனர்.

பூக்களை பொதுமக்களும், வியாபாரிகளும் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். இதனால் பூ விற்பனை ஜோராக நடந்தது. கடந்த மூன்று நாட்களாக பூக்களின் விலை "கிடு கிடு' என உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மஞ்சள் சாமந்தி 100 ரூபாய் முதல் 120, வெள்ளை சாமந்தி 200, கனகாம்பரம் 800, முல்லை அரும்பு 800, குண்டு மல்லி 500, உலாந்தை 500, பைவ் ஸ்டார் ரோஸ் 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

## விருதையில் கோடைக்கு முன் தர்ப்பூசணி விற்பனை "ஜோர்'

த்தாசலம்:விருத்தாசலத்தில் கோடை காலத்திற்கு முன்பே தர்ப்பூசணிப் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

கோடை காலங்களில் வெயிலின் வெப்பத்தை தணிக்கக் கூடிய தர்பூசணிக்கு பொது மக்களிடையே அதிக வரவேற்பு இருக்கும். சாலையோரங்களில் கடைகள் போடப்பட்டு தர்ப்பூசணி அமோகமாக விற்பனையாகும்.

இந்தாண்டு, பருவமழை போதுமான அளவு பெய்யாத நிலையில், தற்போது பனி பொழிவு துவங்கியுள்ளது. இந்நிலையில், விருத்தாசலம் அடுத்த கவனை, சித்தேரி பகுதி விவசாயிகள் கார்த்திகைப் பட்டத்திற்கு முன்பாகவே தர்ப்பூசணியை பயிர் செய்துள்ளனர். தற்போது தர்ப்பூசணி விளைந்து பழுத்துள்ளதால், விருத்தாசலம்

பகுதியில் விற்கப்படுகிறது.

வேளாண் அலுவலர் அன்பழகன் கூறுகையில், "தர்ப்பூசணி எந்த சீசனில் வேண்டுமானாலும் விளையக்கூடியது. கோடை வெயில் நேரத்தில்தான் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தாண்டு வடகிழக்குப் பருவமழை முடிந்ததால், விவசாயிகள் முன்கூட்டியே பயிர் செய்துள்ளனர்' என்றார்.

## கீழணையில் இருந்து கொள்ளிடத்தில் 1,700 கன அடி தண்ணீர் வெளியேற்றம்

சிதம்பரம்:கீழணையில் இருந்து 1,700 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் கொள்ளிடத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வங்கக்கடலில் ஏற்பட்ட தாழ்வழுத்த மண்டலம் காரணமாக, பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் டெல்டா பாசன பகுதியில் சம்பா சாகுபடியில் நீர்பிடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து மேட்டூரில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

திருச்சி, தஞ்சை, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் பலத்த மழை பெய்ததால் கீழணைக்கு கடந்த இரு நாட்களாக 2,500 கன அடி அளவில் தண்ணீர் வரத்து இருந்தது. அதனை வடவாற்றில் திருப்பிவிட்டு, வீராணம் ஏரி நிரப்பப்பட்டது. தற்போது, வீராணம் ஏரியில் 46 அடிக்கு தண்ணீர் நிரப்பி வைக்கப்பட்டுள்ளது. கீழணைக்கு 2,000 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. இதில் வடவாற்றில் 500 கன அடி தண்ணீரும், வடக்கு மற்றும் தெற்கு ராஜன் வாய்க்காலில் தலா 200 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கீழணை முழு கொள்ளளவான 9 அடியை எட்டியதால், மழை தண்ணீர் உபரி நீரை கொள்ளிடம் வடிகாலில் நேற்று அதிகாலை முதல் திறந்து விடப் பட்டுள்ளது. கொள்ளிடம் ஆற்றில் 1,700 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. மேற்கு பகுதி மாவட்டங்களில் பெய்த மழை நீர்

கொள்ளிடத்தில் திறந்துவிடப்படுவதால் கீழணைக்கு கூடுதல் தண்ணீர் வரத்து இருந்து வருகிறது. தற்போது கடலூர் மாவட்ட டெல்டா பகுதியில் பாசனத்திற்கு தண்ணீர் தேவையில்லாததால் கொள்ளிடத்தில் திறந்துவிடப்பட்டுள்ளது.

## வால்பாறையில் கனமழை சோலையாறில் 14 மி.மீ.,

ல்பாறை:வால்பாறையில் நேற்றுமுன்தினம் இரவு கனமழை பெய்தது.
வால்பாறையில் கடந்த சில நாட்களாக மழைப்பொழிவு
முற்றிலுமாக குறைந்தது. இதனால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைந்து, அணைகளின் நீர்மட்டம் சரிந்து வருகிறது.
இந்நிலையில், நேற்றுமுன்
தினம் இரவு, வால்பாறை பகுதியில் கன மழை பெய்தது. சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 158.14 அடியாக குறைந்தது. அணைக்கு விநாடிக்கு 323 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து விநாடிக்கு 387 கன அடி தண்ணீர் பரம்பிக்குளத்திற்கு வெளியேற்றப்படுகிறது.
வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழை அளவு(மி.மீ.,)
வால்பாறை-11, சோலையாறு-14, மேல்நீராறு, கீழ்நீராறு-12.
அமராவதி அணையில் 3 மி.மீ., மழை
உடுமலை அமராவதி அணையின் நீர் மட்டம் நேற்றைய காலை நிலவரப்படி, 90 அடியில், 37.13 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 149 கன அடி நீர் வரத்துஇருந்தது. வினாடிக்கு 483 கன அடி தண்ணீர் வெளியேற்றப் பட்டது. 3 மி.மீ., மழையளவு பதிவானது.

## வாழைத்தார் வரத்து குறைவால் விலை உயர்வு

பொள்ளாச்சி : பொள்ளாச்சி காய்கறி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்துக் குறைவால், விலை உயர்ந்து விற்பனையானது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், வாரம்தோறும் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார்

ஏலம் நடக்கிறது. கோபி, உடுமலை, புதுக்கோட்டை, திருச்சி போன்ற வெளி மாவட்டங்கள்; ஆனைமலை, கோட்டூர், பள்ளிக்கவுண்டன்பாளையம், சேத்துமடை, நஞ்சேகவுண்டன்பாளையம், சிங்காநல்லூர், தொப்பம்பெட்டி போன்ற பொள்ளாச்சி
சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, மார்க்கெட்டுக்கு வாழைத்தார்கள் ஏலத்துக்கு வருகின்றன.

தொடர்ந்து, காந்தி மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. கடந்த வாரத்தை விட, வாழைத்தார் வரத்து குறைவாக இருந்தது. பூவம்பழம்-300, கற்பூர வள்ளி-50, மோரிஸ்-300, நேந்திரம்-50, கதளி-100 என, மொத்தம் 800 வாழைத்தார்களே நேற்றைய ஏலத்துக்கு வந்து இருந்தது. அதனால், அனைத்து ரக வாழைத்தார்களும், கடந்த வாரத்தைவிட 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் விலை உயர்ந்து விற்பனையானது.வியாபாரிகள் கூறுகையில்,"கடந்த வாரத்தில் தீபாவளிப்பண்டிகை என்பதால், 1,500 க்கு மேற்பட்ட வாழைத்தார்கள் ஏலத்துக்கு வந்தன. வரத்து அதிகரிப்பால், விலைக்குறைந்தும் விற்பனையானது. ஆனால், இந்த வாரம் வாழைத்தார் வரத்துக்குறைவால், அதிக விலைக்கு விற்கப்பட்டன. மோரிஸ் வாழைத்தார் 200 முதல் 400 ரூபாய், பூவம் பழம் 200 முதல் 500 ரூபாய், கற்பூர வள்ளி 200 முதல் 950 ரூபாய், செவ்வாழை 200 முதல் 800 ரூபாய், கதளி 100 முதல் 500 ரூபாய் வரையில் விற்பனையாகின. நேந்திரம் கிலோவிற்கு 45 ரூபாய் வரையிலும் விற்பனையானது," என்றனர்.

"ஐந்தரை அடி உயர வாழைத்தார்': சேத்துமடையைச்சேர்ந்த முத்துமாணிக்கம், ஐந்தரை அடி உயரத்தில் கற்பூர வள்ளி ரக வாழைத்தாரை ஏலத்துக்கு கொண்டு வந்தார். வழக்கமாக, இரண்டரை அடி வரையில் மட்டுமே கற்பூர வள்ளி ரக வாழைத்தார் இருக்கும். ஐந்தரை அடி உயரத்தில் வாழைத்தார் இருந்ததால், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆச்சர்யமுடன் பார்த்து சென்றனர். 16

சீப்களில் 250 காய்கள் கொண்ட வாழைத்தார் 950 ரூபாய்க்கு விற்பனையானது. நல்ல நீர், மண், பயன்படுத்திய உரம் மற்றும் நுண்ணூட்டச்சத்துகளால், இதுபோன்ற உயரத்தில் வாழைத்தார் கிடைக்கும் என தோட்டக்கலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### கொப்பரை ஏலத்தில் வரத்து குறைவு

ஆனைமலை : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில், குறைவான விவசாயிகளே கொப்பரை பருப்புகளை கொண்டு வந்தனர். இங்கு, செவ்வாய்க்கிழமை தோறும் கொப்பரை ஏலம் நடைபெறுவது வழக்கம்; நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்தில், 37 விவசாயிகள் மட்டுமே வந்தனர். 72 மூட்டை கொப்பரைகளே வரத்து இருந்தது. விற்பனைக்கூட கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறியதாவது: இப்பகுதியில், கடந்த சில நாட்களாக மழை பெய்ந்து வருவதால், கொப்பரைகளில் ஈரப்பதம் அதிகமாக இருந்தது. குறைந்த விலைக்கே கொப்பரை ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த கொப்பரையில் தரம் பிரிக்கப்பட்டதில், 40 மூட்டைகள் முதல் தர கொப்பரையாக இருந்தது; இது குறைந்தபட்ச விலையாக, ரூ. 58.25 ஆகவும், அதிகப்பட்ச விலையாக ரூ. 60.60க்கும் ஏலம் போனது. 32 மூட்டைகள் கொண்ட இரண்டாம் தர கொப்பரையின், குறைந்தபட்ச விலை ரூ. 48.75க்கும், அதிகப்பட்ச விலையாக ரூ.56.40க்கும் ஏலம் போனது. வரத்து குறைவாக இருந்ததால் மூன்று வியாபாரிகள் மட்டுமே பங்கேற்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

### வெங்காயம் கிலோ ரூ.100

மதுரை : மதுரை மார்க்கெட்டில், வெண்டைக்காய் விலை மலிந்தும், சின்ன வெங்காயம் விலை குறைந்தும் விற்பனையானது.

காய்கறி வியாபாரிகள் சங்க தலைவர் பி.எஸ்.முருகன் கூறியதாவது: நேற்று ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ. 18, பீன்ஸ் 32, முட்டைக்கோஸ் 18, வெண்டைக்காய் 5,

முருங்கைக்காய் 50-70, தக்காளி 14, பூசணிக்காய் 10, பட்டர் பீன்ஸ் 45-65, சோயாபீன்ஸ் 50-55, நூக்கல் 15, டர்னிப் 20, சவ்சவ் 8, பீட்ரூட் 13, பெரிய பாகற்காய் 15, சிறியது 50, முள்ளங்கி 14, அவரைக்காய் 25, கருணைக்கிழங்கு 40, சேனைக்கிழங்கு 20, உருளைக்கிழங்கு 20-25, கறிவேப்பிலை 25, கொத்தமல்லி 30, புதினா 10, இஞ்சி 60, மிளகாய் 25, பல்லாரி 40-50, சிறிய வெங்காயம் 65-80, கொத்தவரை 10, கீரை 7-10, சுரைக்காய் 5, புடலங்காய் 15க்கு விற்பனையானது. கடந்த வாரம் கிலோவுக்கு ரூ. 15 முதல் 20 வரை விற்ற வெண்டைக்காய், நேற்று விலை குறைந்ததால் வத்தல் போடுவதற்காக தாராளமாக வாங்கிச் சென்றனர். பல விவசாயிகள் மாடுகளுக்கு தீவனமாக வாங்கினர். சிறிய வெங்காயம்ரூ. 60ல் இருந்து 80 ஆக உயர்ந்தது. இதனால் சில்லரை கடைகளில் ரூ. 100 வரை விலை எகிறியது, என்றார்

## நல்லெண்ணெய் "கிடுகிடு' உயர்வு

மதுரை : மதுரையில் நல்லெண்ணெய் விலை "கிடுகிடு'வென உயர்ந்தும், பாமாயில் விலை சற்று அதிகரித்தும் விற்பனையானது.
எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: பாமாயில் ஒரு லிட்டருக்கு நேற்று ரூ. 63.50க்கு (கடந்த வாரம் 62) விற்றது. நல்லெண்ணெய் சாதா ரகம் ரூ. 215 (கடந்த வாரம் ரூ. 208), தும்பை ரகம் 228 (கடந்த வாரம் ரூ.225), தீபவழிபாட்டு ரகம் ரூ. 80 முதல் 100 வரை விற்றது. சூரியகாந்தி எண்ணெய் 89, தேங்காய் எண்ணெய் 112, வனஸ்பதி 64, கடலை எண்ணெய் 92, ரைஸ்பிரான் ஆயில் 80க்கு விற்றது. நல்லெண்ணெய் சாதா ரகம் கடந்த வாரத்தைவிட ரூ. 7ம், தும்பை ரகம் ரூ. 3ம் அதிகரித்தது. பாமாயில் லிட்டருக்கு ரூ. 1.50 அதிகரித்துள்ளது. சில வாரங்களாகவே இந்த எண்ணெய் தொடர்ந்து அதிகரித்து வருகிறது, என்றார்.

## வெங்காயம் கிலோ ரூ.90

கோயம்பேடு : சென்னையில், வெங்காய விலை, 90 ரூபாயை எட்டியுள்ளது. கோயம்பேடு சந்தையில், கடந்த சில தினங்களாக, காய்கறி விலை அதிகரித்து வருகிறது.
நேற்றைய நிலவரப்படி, ஒரு கிலோ சாம்பார் வெங்காயம் 90 ரூபாய், பெல்லாரி வெங்காயம் 70 ரூபாய், ஆந்திரா வெங்காயம் 55 ரூபாய், முருங்கைக்காய் 85 ரூபாய், நாட்டு தக்காளி 50 ரூபாய், பெங்களூர் தக்காளி 55 ரூபாய்க்கு விற்கப்பட்டன.
இது குறித்து கோயம்பேடு காய்கறி சந்தை ஆலோசகர் சவுந்திரராஜன் கூறுகையில்,""தீபாவளி வரை காய்கறி விலை குறைய வாய்ப்பில்லை. இதே நிலையில் நீடிக்கலாம்,"" என்றார்.

## பச்சை பட்டாணி ஒரு கிலோ 200 ரூபாய்!

சென்னை:சென்னையில், பச்சை பட்டாணி விலை, திடீரென உச்சத்தை எட்டியுள்ளது.
கோயம்பேடு சந்தையில், கடந்த சில தினங்களாக, காய்கறி விலை அதிகரித்து வருகிறது. இதில், உச்சகட்டமாக, பச்சை பட்டாணி விலை திடீரென உயர்ந்துள்ளது. சில தினங்களுக்கு முன், பச்சை பட்டாணி விலை, கிலோ, 100 ரூபாய் இருந்தது. நேற்று, திடீரென, கிலோ, 150 முதல், 200 ரூபாய் வரை விற்கப்பட்டது.
இது குறித்து, கோயம்பேடு காய்கறி சங்கத்தின் ஆலோசகர் சவுந்திரராஜன் கூறுகையில், ‘‘முகூர்த்த காலகட்டங்களில், காய்கறி விலை சற்று அதிகரிப்பது வழக்கம். பச்சை பட்டாணி விலை மட்டுமில்லாது, அடுத்த ஓரிரு தினங்களில் பெரும்பாலான காய்கறிகள் விலை குறையும்,’’ என்றார்.

## கோமாரி நோயை கட்டுப்படுத்த சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தாமல் மெத்தனம்

தர்மபுரி: மாவட்ட நிர்வாகம் அறிவித்தபடி, பல பஞ்சாயத்துகளில், கோமாரி நோய் தடுப்பு சிறப்பு கிராம சபை கூட்டம் நடக்காததால், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அதிருப்தி அடைந்தனர். தமிழகம் முழுவதும், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதை அடுத்து, மாவட்ட நிர்வாகம், கால்நடைத்துறை அலுவலர்கள் மூலம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. கால்நடை சந்தைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படும் மாடுகளால், பல்வேறு மாவட்டங்களில், கால்நடைகளுக்களுக்கு, கோமாரி நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதால், கிருஷ்ணகிரி உள்பட பல்வேறு மாவட்டங்களில், சந்தைகளில் கால்நடை விற்பனைக்கு தற்காலிக தடைவிதிக்கப்பட்டது.

ஆனால், தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை விற்பனையில் முக்கிய பங்கு வகிக்கும் நல்லம்பள்ளி, காரிமங்கலம் உள்ளிட்ட வார சந்தைகளில், அதிகளவில் மாடுகள் தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் பசு மற்றும் எருமைகள், கேரளா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த சந்தைகளுக்கு கொண்டு வரப்படும் காந்டைகளாலும், வாங்கிச் செல்லப்படும் கால்நடைகளாலும் கோமாரி நோயை கட்டுப்படுத்த முடியாத நிலை தொடர்வதாக, விவசாயிகள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே, மாவட்டத்தில் உள்ள கால்நடைகளின் நலன் கருதி, மாவட்டத்தில் நடக்கும் கால்நடை சந்தைகளுக்கு, உடனடியாக தற்காலிக தடை விதிக்க வேண்டும், என்று விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கோமாரி நோயை தடுக்க, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள, 251 பஞ்சாயத்துகளிலும், சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்த வேண்டும், என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்திருந்தது.

மாவட்ட நிர்வாகத்தின் அறிவிப்புபடி சில பஞ்சாயத்துகளில் மட்டுமே, கோமாரி

நோய் தடுப்பு குறித்த சிறப்பு கிராம சபை நடந்ததாகவும், பெரும்பாலா பஞ்சாயத்துகளில், சிறப்பு கிராம சபை கூட்டம் நடக்காததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்ததாக தெரிவித்தனர்.

மேலும், கோமாரி நோயை தடுக்க மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் தீவிர முயற்சிக்கு ஒத்துழைக்காத, பஞ்சாயத்து நிர்வாக தலைவர் மற்றும் நிர்வாகிகள் மீது மாவட்ட நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுக்க, விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

* கால்நடை சந்தைகளுக்கு தடை:

விவசாயிகளின் கோரிக்கை ஏற்று மாவட்ட நிர்வாகம் கோமாரி நோயை கட்டுப்படுத்த பென்னாகரம், நல்லம்பள்ளி, காரிமங்கலம், கோபிநாதம்பட்டி கூட்டுரோடு, பி.மல்லாபுரம், பாப்பாரப்பட்டி, ஏரியூர், மாரண்டஹள்ளி, கடத்தூர், தர்மபுரி ஆகிய கால்நடை சந்தைகளுக்கு, இரண்டு வாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக நேற்று (நவ., 19) மாலை கலெக்டர் விவேகானந்தன் உத்தரவிட்டார்.

## கோமாரி நோய் தடுப்பு முகாம்

மூங்கில்துறைப்பட்டு:பொரசப்பட்டு கிராமத்தில் கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. மூங்கில்துறைப்பட்டு அடுத்த பொரசப்பட்டு கிராமத்தில் கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கப்பட்டன. இதனையொட்டி நேற்று அக்கிராமத்தில் கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஊராட்சித் தலைவர் சுப்ரமணி தலைமை தாங்கினார். கால்நடைகளுக்கு நோய் பரவும் விதம், அறிகுறிகள், கட்டுப்படுத்தும் முறை, சிகிச்சை முறைகள் குறித்து மூங்கில்துறைப் பட்டு கால்நடை மருத்துவர் சங்கர்கணேஷ் எடுத்துரைத்தார். துணைத் தலைவர் குமார், ஊராட்சி செயலாளர் ராமச்சந்திரன், அன்பழகன் பங்கேற்றனர்.

## மேட்டூர் நீர்வரத்து அதிகரிப்பு நீர்மட்டம் 2 அடி உயர்வு

மேட்டூர்: வடகிழக்கு பருவமழையால், மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்து, மூன்று நாட்களில், நீர்மட்டம், இரண்டு அடி உயர்ந்தது.
மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 8,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது. பாசன பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்ததால், கடந்த, 16ம் தேதி முதல் பாசன நீர் நிறுத்தப்பட்டது. மேலும், நீர்பிடிப்பு பகுதியிலும் பருவமழை தீவிரம் அடைந்ததால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 6,898 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று, 9,294 கனஅடியாக அதிகரித்தது. பாசனத்துக்கு நீர்திறக்காத நிலையில், நீர்வரத்து அதிகரித்ததால், கடந்த, 16ம் தேதி, 79.400 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று, 81.380 அடியாக உயர்ந்தது. கடந்த, மூன்று நாளில் நீர்மட்டம், இரண்டு அடி உயர்ந்துள்ளது.

## மங்களபுரத்தில் 22 மி.மீ., மழை

நாமக்கல்: வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தில், கடந்த சில நாட்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது.நாமக்கல் மாவட்டத்தில் பராமரிக்கப்படும் மழை மானியில் பதிவாகியுள்ள மழை விபரம்:கடந்த, 16ம் தேதி, மாவட்டம் முழுவதும் சராசரியாக, 37.16 மி.மீ., மழை பெய்துள்ளது. தொடர்ந்து, நேற்று முன்தினம் நாமக்கல்லில், 2, ப.வேலூர், 14, ராசிபுரம், 2.2, சேந்தமங்கலம், 3, திருச்செங்கோடு, 19, மங்களபுரம், 22, குமாரபாளையம், 2, மோகனூர், 19, என, 83.20 மி.மீ., மழையில், சராசரியாக, 8.32 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மேகமூட்டத்துடன், கடந்த சில நாட்களாக இருந்த வானம், நேற்று முதல், வெயில் அடிக்கத் துவங்கியது.

## ஒருவந்தூர் பஞ்.,ல் கோமாரி நோய் தடுப்பு குறித்து சிறப்பு கிராமசபை

மோகனூர்: ஒருவந்தூர் பஞ்சாயத்தில், கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து சிறப்பு கிராமசபை கூட்டம் நடந்தது.
கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை, பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடயே ஏற்படுத்தும் விதமாக, சிறப்பு கிராமசபை கூட்டம், நேற்று, மாவட்டம் முழுவதும் நடந்தது.
அதன்படி, மோகனூர் யூனியன், ஒருவந்தூர் பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் கிராம சபை கூட்டம் நடந்தது. பஞ்சாயத்து தலைவர் செல்ல ராஜாமணி தலைமை வகித்தார். கூட்டத்தில், கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய கோமாரி நோய் பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விவாதிக்கப்பட்டது.
தற்போது, இப்பகுதியில் இருந்து கால்நடைகளை வெளியூர்களுக்கு கொண்டு செல்லாமலும், வெளியூரில் இருந்து உள்ளூருக்கு கொண்டு வருவதை தடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.
வி.ஏ.ஓ., சிவக்குமார், யூனியன் ஊர்நல அலுவலர் ராஜூ, யூனியன் கவுன்சிலர் தங்கராஜூ, பஞ்சாயத்து துணைத் தலைவர் சரவணன், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத் தலைவர் பாலசுப்ரமணியன், மகளிர் சுயஉதவிக்குழுவினர், வார்டு உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## "தை பொங்கலுக்கு' சிவகங்கையில் கரும்பு அறுவடைக்கு தயார் :இந்த ஆண்டு விலை அதிகரிப்பு?

சிவகங்கை : ""தை பொங்கல் விற்பனைக்கு,சிவகங்கையில், நடவு செய்த கரும்பு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.வறட்சியால்,விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால்,விலை அதிகமாக இருக்கும்'' என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பொங்கலுக்கு அறுவடை செய்யும் பொருட்டு, சிவகங்கை அருகே வி.மலம்பட்டி, தேவன்கோட்டை, கூட்டுறவுபட்டி, செவல்பட்டி, சாலூர், கள்ளம்பட்டி, சோனாபட்டி, கோவில்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில்

கரும்பு நடவு செய்வது வழக்கம். ஆண்டுதோறும், பங்குனியில், ஏக்கருக்கு, ஆயிரம் கரும்பு கட்டை வரை நடவு செய்வர். 10 மாதங்கள் வரை இவற்றை பராமரித்து,மார்கழி பிறந்தவுடன், கரும்பு நல்ல விளைச்சலை அடைந்து, அறுவடைக்கு தயாராகும். தற்போது சிவகங்கை பகுதியில் நடவு செய்துள்ள,கரும்பு 7 அடி உயரம் வரை வளர்ந்து, அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

கூடுதல் விலை?:கடந்த ஆண்டு, தை பொங்கலை முன்னிட்டு, 300 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு விலை, ரூ.4 ஆயிரம் முதல் 4,500க்கு விற்றது. நடப்பாண்டு, பருவ மழை பொய்த்ததால், நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து விட்டது. கிணற்று பாசனம் மூலம், குறைந்த பரப்பளவில் மட்டுமே, கரும்பை நடவு செய்துள்ளனர்.

வி.மலம்பட்டி கரும்பு விவசாயி கண்ணன் கூறியதாவது: பருவ மழை பொய்த்ததால்,கறுப்பு கரும்பு நடவு செய்யும் பரப்பு, இப்பகுதியில் குறைந்துவிட்டது. கிணற்று பாசனம் மூலம், நடவு செய்த கரும்புகளை, மிகுந்த சிரமத்திற்கிடையே விளைவித்துள்ளோம். ஏக்கருக்கு, ரூ.1.50 லட்சம் வரை செலவழித்துள்ளோம்.

"தை பொங்கலுக்கு' கரும்பு வரத்து குறைவாகத்தான் இருக்கும்.300 கரும்புகள் கொண்ட, ஒரு கட்டு, ரூ.5 ஆயிரம் முதல் ரூ.5,500க்கு விற்றால் தான், லாபம் கிடைக்கும். அதற்கு குறைந்தால், நஷ்டம் தான்," என்றார்

## பருவநிலை மாற்றத்தால் நெற்பயிர்களில் நோய் தாக்குதல்...ஆரம்பம்! பாதிப்பை தவிர்க்க வேளாண் துறை ஆலோசனை

பொன்னேரி:பருவநிலை மாற்றத்தால், நெற்பயிர்களில், நோய் தாக்குதல் ஆரம்பமாகி உள்ளது. பாதிப்பு ஏற்படாமல் இருக்க, விவசாயிகள் வேளாண்மை துறையின் ஆலோசனைகளை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

மீஞ்சூர் ஒன்றியத்தில், 28,287 ஏக்கர் பரப்பளவில், சம்பா பருவத்திற்காக பாபட்லா

பொன்னி 5204, வெள்ளை பொன்னி, ஆகிய நெல் ரகங்களை விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர்.

கடந்த, ஜூலை மாதம் நடவுப் பணிகள் தொடங்கி, மூன்று முறை, களை எடுக்கும் பணிகளும் முடிந்துவிட்டன. இந்நிலையில், நெற் பயிர்களில், இலை கருகல், கதிர் இழை உறை அழுகல் நோய், நெல் குலை நோய், இலை சுருட்டுப்புழு, குருத்துப்பூச்சி ஆகிய நோய்களின் தாக்குதல் ஆரம்பம் ஆகி உள்ளது.

இந்நோய் தாக்குதலால், நெற்பயிர்களின் இலைகள், மஞ்சள் நிறத்திலும், கருகிய நிலையிலும் காணப்படுகின்றன. நெற்பயிர்களின் தண்டு பகுதியில் புழுக்கள் துளையிட்டு, குருத்துக்கள் காய்ந்த நிலையில் உள்ளன. இதனால், நெற் பயிர்களின் வளர்ச்சி குறைந்து உள்ளது.

கடந்த ஆண்டு 800 ஏக்கர் பரப்பளவில் நோய் தாக்குதல் இருந்தது. இந்தாண்டு, எங்கெங்கு பாதிப்பு உள்ளது என, வேளாண்மை துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மாவட்டத்தில், ஈக்காடு, எல்லாபுரம், பெரியபாளையம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய பகுதிகளில் நோய் தாக்குதல்கள் உள்ளன.

பருவ நிலை மாற்றத்தால்...

இது குறித்து, மீஞ்சூர் ஒன்றிய வேளாண்மை துறை உதவி இயக்குநர் ரேவதி கூறுகையில், 'ஒன்றியத்தில், மெதுார், கோளூர், ஆவூர், வேம்பேடு, அனுப்பம்பட்டு உள்ளிட்ட இடங்களில் இந்நோய் தாக்குதல்கள் உள்ளன. கடந்த, 15 தினங்களாக காற்றின் ஈரப்பதம் அதிகரித்து உள்ளது. இது கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்ததை விட சற்று கூடுதலாகும்,' என்றார்.

மேலும், 'வெப்ப அளவும் குறைந்து உள்ளது. இந்த இயற்கை மாற்றங்களால், நெற் பயிர்களில், நோய் தாக்குதல்கள் ஆரம்பம் ஆகியுள்ளன. நோய் தாக்குதல் குறித்து, விவசாயிகள் எங்களை தொடர்பு கொண்டால், நேரில் பார்வையிட்டு உரிய ஆலோசனை வழங்க தயாராக உள்ளோம்,' என்றார்.

நோய்கள் மற்றும் ஆலோசனை

பாக்டீரியல் இழை கருகல் நோய்: தழைச்சத்து உபயோகம் குறைப்பதுடன், ஸ்ரெட்டிரோ மைசின் சல்பேட் , ஸ்ரெட்டிரோ சைக்களின் (18 கிராம்/ ஒரு

ஏக்கருக்கு), மற்றும் காப்பர் ஆக்ஸி குளோரைடு (500 கிராம்/ஒரு ஏக்கருக்கு) கலவையை தெளிக்க வேண்டும்.
குருத்து பூச்சி நோய் மற்றும் இலை சுருட்டு புழு: இதை கட்டுப்படுத்த, கார்ட்டா ஹைட்ரோ குளோரைடு (400 கிராம்/ஒரு ஏக்கருக்கு) தெளிக்க வேண்டும். கதிர் இழை உறை அழுகல் நோய் மற்றும் நெல் குலை நோய்: கார்பன்டெசிம் (அல்லது) டிரை சைக்குளோசோல் (100 மி.லி./ஒரு ஏக்கருக்கு) தெளிக்க வேண்டும்.
தொடர்புக்கு...
வேளாண்மை விரிவாக்க அலுவலர், அலைபேசி எண்: 88833 68510, துணை வேளாண்மை விரிவாக்க அலுவலர், அலைபேசி எண்: 99402 07695.

## நா.பேட்டையில் ரூ. 31 லட்சத்துக்கு மஞ்சள் ஏல விற்பனை

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 31 லட்சம் ரூபாய்க்கு, மஞ்சள் ஏலம் நடந்தது.
தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், ஏலம் நடக்கும்.
தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து, மஞ்சளை வாங்கி செல்கின்றன.
நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 772 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிகபட்சம், 7,839 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 6,419 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள் ஒரு மூட்டை, 5,799 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 4,419 ரூபாய்க்கும் ஏலம் போனது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 14 ஆயிரத்து, 300 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 8,800 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 31 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## மரக்கன்றுகள் வளர்ப்பு

விருதுநகர் : விருதுநகர் நாகலட்சுமி டிரஸ்ட், மாவட்ட வனத்துறை, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் இணைந்து, பைபாஸ் , பாவாலி ரோட்டின் இருபுறமும், 300 மரக்கன்றுகள் நடப்பட்டு, அதனை வளர்கும் பசுமை பணி துவங்கப்பட்டது. பாவாலி ஊராட்சி தலைவர் நாகராஜன், செயலர் ராஜா, நாகலட்சுமி டிரஸ்ட் செயலர் சுரேஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் கணேசன், பொருளாளர் ரவிச்சந்திரன் கலந்துகொண்டனர். மாவட்ட வனத்துறையிலிருந்து, வேம்பு,கொன்றை, புங்கை, தேக்கு, நாவல் மரக்கன்றுகள் பெறப்பட்டு, சில குறிப்பிட்ட கிராமங்களை தேர்ந்தெடுத்து, மரக்கன்றுகளை நடப்பட்டு வருகிறது. இதை பார்வையிட்ட மாவட்ட வன அலுவலர் தங்கராஜ்,""சுற்றுச்சூழலை பாதுகாக்க, பொதுமக்கள், இருக்கும் மரங்களை பாதுகாப்பது மட்டுமின்றி, ஒரு நபருக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்," என்றார்.

## கோமாரி நோய் தாக்குதலில் கால்நடை இறப்பு தடுக்க நடவடிக்கை அவசியம்

தஞ்சாவூர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட செயலாளர் சாமி நடராஜன் கூறியதாவது:

தற்போது, கால்நடைகளுக்கு வேகமாக கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட்டு வருகிறது. இந்நோய் பாதிப்பால் நூற்றுக்கணக்கான ஆடு, மாடுகள் இறந்துவிட்டன. திருவிடைமருதூர் தாலுக்காவில் நாச்சியார்கோயில், திருச்சேறை, ஆரியச்சேரி, செம்மங்குடி, திருநரையூர், கிருஷ்ணாபுரம், கும்பகோணம் தாலுக்காவில் கொத்தங்குடி, இன்னாம்பூர், ஒரத்தநாடு தாலுக்காவில் புதூர், பாளாபுத்தூர், கக்கரை, தெலுங்கன் குடிகாடு உள்ளிட்ட பகுதிகளில் மாடுகள் கோமாரியால் இறந்துள்ளன. தஞ்சை மாவட்ட நிர்வாகம் சார்பில், கோமாரி நோயில் இறந்த கால்நடை எண்ணிக்கை குறித்து குறைவாக புள்ளி விபரம் தரப்பட்டுள்ளது.

அதனால், உண்மை நிலவரம் அறியும் வகையில், வருவாய்த்துறையினரை

கொண்டு மேற்கண்ட கணக்கெடுப்பை நடத்த கலெக்டர் உத்தரவிட வேண்டும். அண்டை மாநிலமான, கர்நாடகத்தில் பால் கறக்கும் மாடுகள் இறந்தால் 25 ஆயிரம் ரூபாயும், சினையாக இருக்கும் மாடுகள் இறந்தால் 20 ஆயிரம் ரூபாயும், சாதாரண மாடுகள் இறந்தால் 15 ஆயிரம் ரூபாயும் இழப்பீடு வழங்க, அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

அதுபோல, தமிழகத்திலும் கோமாரி நோய் தாக்குதலில் இதுவரை இறந்த கால்நடைகளை கணக்கிட்டு, உரிய இழப்பீடு தொகையை விவசாயிகளுக்கு அரசு வழங்க வேண்டும். நோய் தாக்குதல் ஏற்படாமல் கால்நடைகள் இறப்பு தடுப்பு நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்த வேண்டும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.11.2013**

**அன்னூர் பகுதியில் மாடுகளை கோமாரி நோய் தாக்கியது**

அன்னூர் தாசியிந்தோட்டத்தைச் சேர்ந்த விவசாயி நடராஜ் என்பவருக்கு சொந்தமான 5 வயது, 3 வயது மாடுகள் மற்றும் 2 கன்றுகளை கோமாரி நோய் தாக்கியுள்ளது. வாய், நாக்கு, மூக்கு, பால் காம்புகள் மற்றும் கால் குளம்பு பகுதிகளில் புண் ஏற்பட்டு மாடுகள் தீவனம் சாப்பிட முடியாமல் உடம்பு இளைத்து வந்தது. மேலும் வழக்கமாக நாளொன்றுக்கு 10 லிட்டர் வீதம் பால் கறந்த மாடுகள் தற்போது 2 லிட்டர் மட்டுமே கறக்கிறது.

மேலும் அதே பகுதியைச் சேர்ந்த சிவராஜ் என்பவரின் ஒரு மாட்டையும் கோமாரி நோய் தாக்கியுள்ளது. இந்நோய் அருகில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கும் பரவும் ஆபத்து உள்ளது.

இது தொடர்பாக கால்நடை துறை உதவி இயக்குனர் தங்கவேல் கூறுகையில்,

‘கிராமப்பகுதியில் பெரும்பாலும் கோமாரி நோய் தென்பட்டால் நாட்டு வைத்தியத்தை பின்பற்றுகின்றனர். கால்நடை மருத்துவமனைகளை அணுகி மாடுகளுக்கு தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். கிராமப்புற விவசாயிகள், தங்கள் மாடுகளை கோமாரி நோய் தாக்கியிருப்பது குறித்து நால்நடை மருத்துவமனைகளுக்கு தகவல் தராதால் இறக்கும் நிலை ஏற்படுகிறது. கோமாரி நோய் தாக்கிய மாடுகள் மூலம் கிடைக்கும் பாலை மனிதர்கள் குடித்தால் வயிற்றுப்போக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. கோமாரி நோய்க்கு தடுப்பூசி போடுவதற்கும் ஆலோசனைக்கும் 98422 63038 என்ற செல்போனில் கால்நடை மருத்துவருடன் பேசலாம்’ என்றார்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**20.11.2013**

## கோவை–மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் 1,700 பூச்செடிகள் நடுதல்



**கோவை மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையை பசுமையாக்கும் வகையில் சாலை பாதுகாப்புச் சங்கம் சார்பில் சாலையின் நடுவில் பூச்செடிகள் நடும் பணி நடைபெற்று வருகிறது. சாலையின் நடுவில் உள்ள தடுப்புச்சுவர் பகுதியில் பூச்செடிகள் நட முடிவு செய்யப்பட்டது. அதன்காரணமாக வி.ஜி.மருத்துவமனை சார்பில் ரூ.40 ஆயிரம் செலவில் சுமார் ஆயிரத்து 700 அரளிப் பூ நாற்றுக்கள் நடும்பணி தொடங்கியது.**

துடியலூர்,

இதற்கான நிகழ்ச்சிக்கு அக்வா குரூப் நிறுவனங்களின் மேலாளர் கிருஷ்ணகுமார் தலைமை தாங்கினார். சங்கத் தலைவர் எஸ்.வேணுகோபால், செயலாளர் எம்.தேவேந்திரன், பொருளாளர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேசிய நெடுஞ்சாலை துறையின் கோட்டப் பொறியாளர் ஜி.மனுநீதி, துணைக் கோட்டப் பொறியாளர் பி.வையாபுரி, துணைப் பொறியாளர் ஜெ.புவனேஷ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு பூ செடி நாற்றுகளை நடும் பணியை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் செல்வம், சி.ஆர்.ராமச்சந்திரன், ராமமூர்த்தி, ஜீவா, வி.சந்திரசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 82.19 அடியாக உயர்வு



சேலம், -

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழை காவிரி டெல்டா பாசன பகுதிகளிலும் தீவிரம் அடைந்தது. இதனால் பாசன பகுதிகளில் தண்ணீர் தேவை முற்றிலும் குறைந்தது.இதன் காரணமாக கடந்த 16–ந் தேதி காலை முதல் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது அடியோடு நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்ததையடுத்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்தது.

அணையில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டு உள்ள நிலையில், நீர்வரத்து அதிகரித்ததால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.இது நேற்றைய நிலவரப்படி 81.38 அடியாக இருந்த நீர் மட்டம் இன்று 82.19 அடியாக உள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு 9,745 கன அடியாக உள்ளது.இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்குமானால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர வாய்ப்பு உள்ளது.

## சர்க்கரை இறக்குமதியை தடை செய்யக்கோரி 12–ந் தேதி ம.தி.மு.க .சார்பில் டெல்லியில் ஆர்ப்பாட்டம்

ஈரோடு,

சர்க்கரை இறக்குமதியை தடை செய்யக்கோரி வருகிற 12–ந் தேதி ம.தி.மு.க. சார்பில் டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ஈரோட்டில் வைகோ கூறினார்.

<u>பேட்டி</u>

வருகின்ற பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு ம.தி.மு.க. சார்பில் மக்களை சந்திக்கும் மறுமலர்ச்சி பயணம் என்னும் தேர்தல் பிரசார நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. முதல் கட்டமாக இந்த நிகழ்ச்சி ஈரோடு சோலார் பகுதியில் கடந்த மாதம் தொடங்கியது.

இந்த நிலையில் 2–வது கட்ட தேர்தல் பிரசாரம் ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே உள்ள நடுப்பாளையத்தில் நேற்று மாலை தொடங்கியது. இதில் கலந்து கொள்ளவந்த ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நடுப்பாளையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

<u>9–ந் தேதி ஆர்ப்பாட்டம்</u>

கரும்பு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்களின் துயரத்தை துடைக்கவும் ஈரோடு பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் அ.கணேசமூர்த்தியின் டெல்லியில் உள்ள அவருடைய இல்லத்தில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் வருகிற 21–ந் தேதி நடைபெறுகிறது. இந்த ஆலோசனை கூட்டத்தில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில விவசாய சங்க தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இதனைத்தொடர்ந்து வருகிற (டிசம்பர்) 9–ந் தேதி எனது (வைகோ) தலைமையிலும், கணேசமூர்த்தி எம்.பி. முன்னிலையிலும் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

<u>டெல்லி ஜந்தர் மந்தர்</u>

பின்னர் அன்று இரவே சென்னையில் இருந்து டெல்லிக்கு 1,200 விவசாயிகளுடன் சிறப்பு ரெயில் டெல்லிக்கு செல்கிறது. டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகுதியில்

12–ந் தேதி அனைத்து மாநில விவசாயிகளை ஒன்று திரட்டி கணேசமூர்த்தி எம்.பி. தலைமையில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

மத்திய அரசு சர்க்கரை இறக்குமதியை நிறுத்தவேண்டும் அல்லது சர்க்கரை இறக்குமதிக்கான வரியை உயர்த்தவேண்டும். எத்தனாலை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவே விவசாயிகளை திரட்டி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூறினார்.

முன்னதாக நடுப்பாளையத்தில் தனது 2–வது கட்ட தேர்தல் பிரசாரத்தை தொடங்கி வைகோ பேசும்போது கூறியதாவது:–

ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் மஞ்சளுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்யும் உரிமை வேண்டும் என்று கேட்டு போராடுகிறார்கள். மஞ்சள் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக கணேசமூர்த்தி எம்.பி. மஞ்சள் விவசாயிகளை ஒன்று திரட்டி டெல்லியில் பிரதமர் மன்மோகன்சிங், மத்திய விவசாயத்துறை மந்திரி சரத்பவார் ஆகியோரை சந்திக்க ஏற்பாடு செய்தார்.

விவசாயிகள் பிரச்சினை மற்றும் பொதுமக்கள் பிரச்சினை உள்பட எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதற்காக போராட, மக்களுக்கு துணை நிற்க ம.தி.மு.க. என்றுமே தயங்காது.

இந்த நிகழ்ச்சியில் கணேசமூர்த்தி எம்.பி, ஈரோடு மாவட்ட அவைத்தலைவர் செ.மு.குழந்தைவேலு, கரூர் மாவட்ட செயலாளர் பரணி மணி, தேர்தல் பணிக்குழு செயலாளர் கழக குமார், மாநில இளைஞர் அணி செயலாளர் ஈஸ்வரன், துணைச்செயலாளர் செல்வராஜ், மாநில தொண்டர் அணி துணைச்செயலாளர் முசிறி ரவிச்சந்திரன், சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர் பூங்கொடி சாமிநாதன், கொடுமுடி ஒன்றிய செயலாளர் கொற்றவேல், ஈரோடு நகர ம.தி.மு.க. செயலாளர் பொன்னுசாமி உள்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரம் சென்னை-ஓங்கோலுக்கு இடையே நாளை இரவு கரையை கடக்கிறது**




சென்னை,தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாகப்பட்டினம் அருகே கடந்த 16-ந் தேதி கரையை கடந்தது. அதைத் தொடர்ந்து கடந்த 15-ந் தேதி முதல் தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது.இந்த நிலையில்வங்க கடலில் நேற்று முன்தினம் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அது நேற்று வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக (புயல் சின்னம்) மாறி உள்ளது.இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெற்று தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற உள்ளது. அது தெற்கு ஆந்திராவிற்கும், வடதமிழ்நாட்டுக்கும் இடையே அதாவது சென்னைக்கும், ஓங்கோலுக்கும் இடையே நாளை (வியாழக்கிழமை) இரவு கரையை கடக்கிறது.

தமிழ்நாட்டில் இன்று (புதன்கிழமை) தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் அநேக இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை அல்லது மிக பலத்த மழை பெய்யும். வடமாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். மீனவர்கள் யாரும் கடலில் மீன்பிடிக்கச்செல்லவேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்.புயல் சின்னம் காரணமாக புயல் எச்சரிக்கை கூண்டு பல துறைமுகங்களில் ஏற்றப்பட்டுள்ளது. சென்னை துறைமுகத்தில் 1-ம் எண் கூண்டும், நாகப்பட்டினத்தில் 2-ம் எண் கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது. எண்ணூர் துறைமுகம், காட்டுப்பள்ளி துறைமுகம், காரைக்கால் துறைமுகம், புதுச்சேரி துறைமுகம், பாம்பன் துறைமுகம், தூத்துக்குடி துறைமுகம் ஆகியவற்றில் தலா 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.இவ்வாறு சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் உற்பத்தி வளர்ச்சி மூன்று மடங்காக அதிகரிக்கும்



பருவமழை நன்றாக உள்ளதால், நடப்பு 2013–14–ஆம் நிதி ஆண்டில் வேளாண் உற்பத்தி வளர்ச்சி மூன்று மடங்கு அதிகரித்து சுமார் 5.7 சதவீதமாக உயரும் என வேளாண் செலவினம் மற்றும் விலைகள் ஆணையம் (சி.ஏ.சி.பி) தெரிவித்துள்ளது. சென்ற நிதி ஆண்டில் இந்த வளர்ச்சி 1.9 சதவீதமாக இருந்தது.

நடப்பு நிதி ஆண்டில் எண்ணெய் வித்துக்கள், பருப்பு, பருத்தி போன்றவற்றின் உற்பத்தி நன்கு அதிகரிக்கும் என சி.ஏ.சி.பி.யின் தலைவர் அசோக் குலாத்தி தெரிவித்துள்ளார். இந்த நிதி ஆண்டில் வேளாண் துறை வருவாய் 15 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக கிராமங்களில் உரம், பூச்சி மருந்துகள், இரு சக்கர வாகனங்கள், நுகர்வோர் சாதனங்கள் போன்றவற்றின் விற்பனை அதிகரித்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் என பல்வேறு தரப்பினரும் எதிர்பார்க்கின்றனர்